# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர்ஆண்டு2030 வைகாசி 31 திங்கட்கிழமை [14-06-1999] UTHAYAN ALivelyNationalTamilDaily கதிர்: 171


## லண்டனில் மேற்கு நாடுகளுடன் அன்ரன் பாலசிங்கம் பேசுவார்!

### மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தொடர்பாக

லண்டன், ஜூன் 14

''லண்டன் வந்துள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் மேற்கு நாடுகளுடன் கலந்துரையாடி போரை முடிவுக்கு கொண்டுவர 3ஆம் தரப்பு மத்தியஸ்தம் ஒன்றை ஏற்பாடு செய்வதில் ஈடுபடுவார்.''

மேற்கண்டவாறு விடுதலைப் புலிகளின் சர்வதேச அலுவலக அதிகாரி அன்ரன்ராஜா பி. பி. ஸிக்குத் தெரிவித்தார்.

வன்னியில் தங்கியிருந்த அன்ரன் பாலசிங்கம் லண்டன் வந்துள்ளார் என்று வெளியான தகவல் தொடர்பாக அன்ரன்ராஜா பி. பி. ஸிக்குத் தெரிவித்ததாவது:

உடல்நிலை சரியில்லாத நிலையில் லண்டன் வந்துள்ள அன்ரன் பாலசிங்கம் முதலில் சிகிச்சை பெறவிருக்கின்றார். அத்துடன்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் கோரிக்கை பிரிட்டன் நிராகரிப்பு!

### நடவடிக்கை எடுக்க மறுப்பு

லண்டன், ஜூன் 14

லண்டனில் கடந்த மாதம் 19 ஆம் திகதி இலங்கை—தென் ஆபிரிக்க அணிகளுக்கிடையில் கிரிக்கெட் ஆட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்த சமயம் தமிழர்களுக்கு ஆதரவான சுலோகங்களுடன் சிறியரக விமானம் ஒன்று பறந்தது தொடர்பாக எந்த நடவடிக்கையையும் எடுக்க முடியாது என்று இலங்கை அரசிடம் பிரிட்டன் தெரிவித்துள்ளது.

''சட்டத்தை மீறாத வரை தமது கருத்தை வெளிப்படுத்தும் உரிமை மக்களுக்கு உண்டு'' என்று இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் இலங்கை அரசுக்குத் தெரிவித்துள்ளார்

[10 ஆம் பக்கம் பார்க்க[

## வாகன அணி பாதிப்பு

'போர்க்கோஷம் 4' இராணுவ நடவடிக்கை காரணமாக வன்னிக்கான உணவுப் பொருள்களை எடுத்துச் செல்லும் வாகன அணிச்சேவை பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

விடத்தல்தீவு வரை படையினர் முன்னேறிநிலைகளைப் பலப்படுத்தி வருவதால் வாகனப் போக்குவரத்துக்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

அதேநேரம் — படையினர் கைப்பற்றிய பாப்பா மோட்டைக்கு மன்னார் அரச அதிபர் இன்று செல்வதாகக் கூறப்பட்டது. (இ-3-21-164)

## செம்மணிப் புதைகுழி விவகாரம்

# உள்நாட்டு, வெளிநாட்டு நிபுணர்குழு இன்று வருகை!

## தேர்தல்களை முன்கூட்டி நடத்துமாறு கோரிக்கை

கொழும்பு, ஜூன் 14

தென்மாகாணசபைத் தேர்தலில் ஆளும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வெற்றியீட்டியதை அடுத்து ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் ஆகியவற்றை முன்கூட்டி நடத்துமாறு சிரேஷ்ட அமைச்சர்கள் ஜனாதிபதியிடம் கோரியுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தல் அடுத்த வருடம் ஓகஸ்ட் மாதத்திலும் —

நாடாளுமன்றத் தேர்தல் அடுத்த வருடம் நவம்பர் மாதத்திலும் — நடத்தப்பட வேண்டும்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஊர்காவலர் சுட்டுக் கொலை

முன்னாள் ஊர்காவல் படை உறுப்பினர் ஒருவர் நேற்று மாலை 5-30 மணியளவில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மருதமுனையில் அவரது வீட்டில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

சம்பவம் தொடர்பான மேலதிக தகவல்கள் கிடைக்கவில்லை. (இ-3-21)

## தோண்டும் பணிகள் நாளைமறுதினம் ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 14

செம்மணியில் புதைகுழிகளைத் தோண்டும் பணிகளை ஆரம்பிப்பதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிபுணர்கள் அடங்கிய குழு இன்று யாழ்ப்பாணம் வருகிறது.

சட்டமா அதிபர் திணைக்கள அரச சட்டவாதி யசந்த கொட்டகொட இத்தகவலை நேற்றிரவு தெரிவித்தார்.

நாளை மறுதினம் புதைகுழி தோண்டும் பணிகள் ஆரம்பிக்கப்பட இருப்பது தெரிந்ததே.

சட்ட மருத்துவத்துறைநிபுணர் நெரியல்ல, மண்ணியல் நிபுணர் நந்தசேன, இரசாயனப்பகுப்பாய்வாளர் மெண்டிஸ் ஆகியோரும்—

இந்தப்பணியின் போது பார்வையாளர்களாகக் கலந்து கொள்ளும் அமெரிக்க வைத்திய விஞ்ஞான நிபுணர்கள், சர்வதேச மன்னிப்புச் சபைப் பிரதிநிதிகள் ஆகியோரும்— இன்று யாழ்ப்பாணம் வருகின்றனர்.

செம்மணி தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட மேலதிக நீதிவான் என். அருள்சாகரன் வெளிநாட்டில் இருந்து திரும்பாததால் மற்றுமொரு தமிழ் நீதிவான் வழக்கு விசாரணைக்

(10 ஆம் பக்கம் பார்க்க)



அரைகுறை வெற்றியுடன் அசட்டுத் துணிச்சல் வந்திருக்குப் பாருங்கோ...!

## அர்ச். அந்தோனியார் திருச்சொரூப பவனியில் ஒருவர் பலி! 90பேர் காயம்

### பக்தர்கள் ஏறிநின்ற சுவர் இடிந்து வீழ்ந்தது

கொழும்பு, ஜூன் 14

கொச்சிக்கடை அர்ச். அந்தோனியார் தேவாலயத்தில் நேற்று மாலை திருச்சொரூப பவனி இடம்பெற்றுக் கொண்டிருந்த சமயம் பக்தர்கள் ஏறிநின்ற சுவர் ஒன்று இடிந்து வீழ்ந்ததில் பெண் ஒருவர் உயிரிழந்தார்; 90 பேர் காயமடைந்தனர்.

மேற்படி ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தை ஒட்டித் திருச்சொரூப பவனி நேற்று மாலை இடம்பெற்றது.

ஜிந்துப்பிட்டி வைத்தியசாலைக்கு அருகில் பவனி சென்றுகொண்டிருந்த சமயம் அந்த வைத்தியசாலையின் சுவரே சன நெருக்கடியில் இடிந்து வீழ்ந்தது.

அந்தச் சுவருக்கு மேல் ஏறிநின்றவர்களும் அருகில் சென்றவர்களும் அந்தச் சுவருக்குள் சிக்கிக்கொண்டனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பாரிய தாக்குதல் திட்டத்தை திசை திருப்பவே போர்க்கோஷம்-4

### இராணுவ விமர்சகர்கள் கருத்து

கொழும்பு, ஜூன் 14

வன்னியில் விடுதலைப் புலிகள் மேற்கொள்ள திட்டமிடும் பாரிய தாக்குதலைத் திசை திருப்பும் முயற்சியே ''போர்க்கோஷம் - 4'' இராணுவ நடவடிக்கை என்று கொழும்பில் உள்ள இராணுவ விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

கிளிநொச்சியில் மேற்கொண்ட பாரிய தாக்குதல் ஒன்றைப் போன்ற தாக்குதல் ஒன்றுக்கு விடுதலைப் புலிகள் தயாராகி வருவதாக செய்திகள் வெளியாகியுள்ளன என்றும்—

அந்தத் தாக்குதலைத் திசை திருப்பவே படையினர் தற்சமயம் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர் என்றும்— ஆய்வாளர்கள் மேலும் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய முகாம்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை விட தற்போது புலிகள் திட்டமிட்டு வரும் தாக்குதல்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கைப்பற்றிய பகுதிகளுக்கு அனுருத்த நேற்று விஜயம்

### பொது மக்களைச் சந்தித்தார்

கொழும்பு, ஜூன் 14

வன்னியில் ''போர்க் கோஷம் - 4'' இராணுவ நடவடிக்கை மூலம் கைப்பற்றப்பட்ட பகுதிகளுக்கு பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த விஜயம் மேற்கொண்டுள்ளார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## செபஸ்ரி யேசுதாஸன்

குருநகரைச் சேர்ந்தவரும் யாழ்.மாநகரசபை முன்னாள் உறுப்பினரும் சமூக சேவையாளருமான செபஸ்ரி யேசுதாஸன் (சவுந்தரநாயகம்) 13-06-1999 காலை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (14-06-1999) திங்கட்கிழமை பிற்பகல் 4-00 மணியளவில் குருநகர் புனித யாகப்பர் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
பிள்ளைகள், சகோதரர்.

22,சென்.ஜேம்ஸ் மகாவித்தியாலய வீதி,
குருநகர். (66601)

## திருமதி கணபதிப்பிள்ளை ஞானபூசணம்

(நாகேஸ்)

நுணாவில் மத்தி, சாவகச்சேரியைச் சேர்ந்த திருமதி கணபதிப்பிள்ளை ஞானபூசணம் (இளைப்பாறிய நெசவு ஆசிரியை) அவர்கள் 13—06—99 ஞாயிற்றுக்கிழமையன்று காலமானார்.

அன்னார் வைத்தியலிங்கம் கணபதிப்பிள்ளை (இளைப்பாறிய நெசவு மேற்பார்வையாளர்) அவர்களின் அன்பு மனைவியும், சிவகுமார் (ஆசிரியர்), கலைச்செல்வி (ஜேர்மனி), ரவிக்குமார் (பிரான்ஸ்), பாரதி ஆகியோரின் அன்புத் தாயாரும், தயானி, சிவகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும், நிரோசா, மதுசா, சிந்து, கஜன் ஆகியோரின் பேர்த்தியும் சின்னத்துரை கனகமுத்து, மாணிக்கம் செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 14—06- 99 திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2.00 மணிக்கு சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வை. கணபதிப்பிள்ளை சிவகுமார்
(மகன்)

நுணாவில் மத்தி,
சாவகச்சேரி. (66602)

## திருமதி தாமோதரம்பிள்ளை பூரணம்

மல்லாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி தாமோதரம்பிள்ளை பூரணம் அவர்கள் 13- 06- 1999 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளையின் அன்பு மனைவியும், மனோன்மணி, காலஞ்சென்ற நடராசா, கனகரட்ணம், கனகசபை, கண்ணுத்துரை, துரைசிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும், குமாரகுலசிங்கம், யோகநாயகி, இந்திரா, சுசீலாதேவி, லக்ஷமிகாந்தி, சுபத்திரா ஆகியோரின் அன்பு மாமியாரும், லட்சுமிப்பிள்ளை, காலஞ்சென்றவர்களான சின்னையா, செல்லத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும், உதயகுமார், ஜெயக்குமார், சாந்தி, தர்மினி, வரதக்குமார், நந்தக்குமார், தயானி, குமுதினி, சிவக்குமார், பவானி, செந்தில்குமரன், துஷ்யந்தி, சர்மிளா, மேகலா, சர்மிளன், அனோமிலா, சேதுப்பிரியா, குகன், ரோகினி, லக்ஸ்மன், அபிராமி ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14-6-99) திங்கட்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தா. கண்ணுத்துரை
(மகன்)

மல்லாகம். (66598)

## அரியகுட்டி பொன்னுத்துரை

(ஊரெழு மேற்கு)

ஊரெழுமேற்கைச் சேர்ந்த அரியகுட்டி பொன்னுத்துரை 10- 06- 99 இல் காலமானார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும் சின்னத்தங்கச்சி, காலஞ்சென்றவர்களாகிய அருணாசலம் செல்லத்துரை, தங்கச்சியம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் சிவசோதி, ஜெகசோதி, தவசோதி, கதிர்காமநாதன் (அப்புச்சி), வரதநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் தகப்பனாரும் செல்லத்துரை (சாஸ்திரி), யோகலிங்கம் (பாணந்துறை), சிவசோதி (யாழ். போதனா வைத்தியசாலை), தர்மராசா, வசந்தி (ஜேர்மனி), கனகம்மா ஆகியோரின் அன்பு மாமனாரும் பிருந்தினி, பாபுச்சி, ஜெகன், புருஸ்கரன், சுஜேன், சஞ்ஜேன், மதிபன், மருபன், மகிந்தா, வேந்தன், விவேகன் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (14-6-99) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பொக்கணை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சிவசோதி
(மகன்)

ஊரெழு மேற்கு,
சுன்னாகம். (66603)

## பண்டிதமணி நூற்றாண்டு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 14

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் பிறந்ததின நூற்றாண்டு நிறைவு விழா எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகிறது.

நூற்றாண்டு விழாவையொட்டிய பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, கவிதைப் போட்டி ஆகியன எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிறு முற்பகல் வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் ஆரம்பமாகி நடைபெற உள்ளன.

பேச்சுப்போட்டியில் 52 பாடசாலைகளும், கட்டுரைப் போட்டியில் 32 பாடசாலைகளும் பங்குபற்ற உள்ளன. மரபுக்கவிதைப் போட்டியில் இருபத்தைந்து கவிஞர்கள் பங்கு பற்றுகிறார்கள்.

குறித்த போட்டிகளில்பங்குபற்றி முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்கு முறையே தங்கப்பதக்கம், வெள்ளிப்பதக்கம், வெண்கலப்பதக்கம் பரிசாக வழங்கப்படவுதுடன் தகுதிகாண்பவர்களுக்கு ஆறுதல் பரிசில்களும் அளிக்கப்படும் என்று பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபையின் செயலாளர் ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் தெரிவித்தார்.

## விறகு வெட்டச் சென்றவர் மிதி வெடியில்

இராணுவத்தினரால் கைவிடப்பட்ட காவலரண் பகுதிக்குள் விறகு வெட்டச் சென்றவர் மிதி வெடியில்சிக்கி வலது காலை முழங்காலுக்குக் கீழ் இழந்தார்.

அளவெட்டிப் பகுதியில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற இந்த சம்பவத்தில்நான்கு பிள்ளைகளின் தந்தையான சுன்னாகத்தைச் சேர்ந்த முருகன் தவராசா (வயது 37) என்பவரே கால் இழந்து படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (இ—15)


**நாகம்ஸ்**
சுன்னாகம்
15 - 06 - 99 வரை
அர்ஜுன், ரஞ்சிதா, கவுண்டமணி, செந்தில் நடித்த
**ஜெய்ஹிந்த்**
காட்சிகள் 11.00, 2.30
[ புதிய நேரம் ]
[ 66581 ]

**லிபேட்டி தியேட்டர்**
அச்சுவேலி
சாயிகுமார் — விஜயசாந்தி நடித்த
**தளபதி கோட்டை**
காட்சிகள் 10. 30, 2. 30
(பழைய நேரப்படி)
Fax No. 070— 212223
FOREIGN T. P. NO-
0094 - 70 — 212223
(66328,

**ராஜா**
யாழ்ப்பாணம்
விஜய், தேவயானி, ரம்பா, மணிவண்ணன், செந்தில் மற்றும் பலர் நடித்த
**நினைத்தேன் வந்தாய்**
10.30, 2.30
(சி/7862)


# நயினை மஹோற்சவம் இன்று ஆரம்பமாகிறது

வேலணை, ஜூன் 14

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று திங்கட்கிழமை நண்பகல் 12மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

கொடியேற்றத்தினைத் தொடர்ந்து முறையே 20, 22, 23, 24, 26, 27, 28, 29 ஆம் திகதிகளில் இங்கு கைலைக்காட்சி, அஷ்டோத்திர சங்காபிஷேகம், சிவபூசை கைலைக்காட்சி, வாயுபட்சணி நாகம் வீதியுலா, சப்பறம், தேர், தீர்த்தம், தெப்பத்திருவிழா ஆகியன இடம்பெறும்.

அம்பாளைத் தரிசிக்க வரும் அடியார்களின் நலன் கருதி வழமை போல் இம்முறையும் மோட்டார் படகுச் சேவையினர், அமுதசுரபி அன்னதான சபையினர், தொண்டர் சபையினர், சாரணர்கள், தாகசாந்தி நிலையத்தினர் அனைவரும் வேண்டிய ஒழுங்குகளைச் செய்துள்ளனர்.

ஆலயத்திற்கு உள்ளேயும் வெளியேயும் வேண்டிய சுகாதார சேவைகளை வேலணை பிரதேச சபையின் நயினாதீவு உப அலுவலகமும், புங்குடுதீவு உப அலுவலகமும் இணைந்து வழங்க ஏற்பாடாகி உள்ளது.

குறிகாட்டுவான் இறங்குதுறையில் தற்காலிக மலசல கூடம், யாத்திரிகர்கள் தங்கி இளைப்பாறுவதற்கான தற்காலிக கொட்டகைகள் என்பன அமைக்கப்பட்டுள்ளன. (ஐ—167—111)


## சேவைநலம் பாராட்டு விழா

### திரு. இ. மகேந்திரன்

(கொக்குவில் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர்)

கொக்குவில் இந்துக்கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு. இ.மகேந்திரன்அவர்களுக்கு சேவைநலன்பாராட்டு விழா ஒன்றினை வருகிற ஜூலை மாத முற்பகுதியில் கொக்குவில் இந்துக் கல்லூரியின்பழையமாணவர் சங்கமும் கல்லூரியின் அபிவிருத்திச் சங்கமும் இணைந்து நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளது. இந்த நிகழ்வில் கலந்து கொள்ள விரும்பும் பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் ஆகியோர் பின்வருவோரிடம் சந்தித்து தாங்கள் கலந்து கொள்வதை உறுதிப்படுத்துமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

(I) திரு. இ. செல்வநாதன் (நகுலன்)
செயலாளர்
கொக்குவில் இந்துக் கல்லூரி அபிவிருத்திச் சங்கம்
(லக்சுமி ரேடஸ், கொக்குவில் சந்தி)

(II) திரு, மு, வேலாயுதபிள்ளை (ஆசிரியர்)
பழைய மாணவர் சங்க நிர்வாக உறுப்பினர்
(கொக்குவில் இந்துக் கல்லூரி)

கொக்குவில் இந்துக்கல்லூரி
பழைய மாணவர் சங்கம், அபிவிருத்திச் சங்கம்.
(66600)

யா / அச்செழு
### சைவப்பிரகாச வித்தியாலயம்
## பரிசளிப்பு விழா - 1999

காலம்: நாளை (15—06—1999) செவ்வாய் பிற்பகல் 1.30 மணி

தலைவர்: திரு. இ. குணநாதன் அவர்கள் (அதிபர்)

பிரதம விருந்தினர்:
கலாநிதி ச. நா. தணிகாசலம்பிள்ளை அவர்கள்
(கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாண வலயம்)

சிறப்பு விருந்தினர்:
திரு. இ. சிவஞானசுந்தரம் அவர்கள்
(உதவிக் கல்விப் பணிப்பாளர், கோப்பாய்ப் பிரிவு)

கௌரவ விருந்தினர்:
திரு. பொ. இராமலிங்கமூர்த்தி அவர்கள்
(மின் அத்தியட்சகர்,
இலங்கை மின்சார சபை, யாழ்ப்பாணம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பா. அ. சங்கம், பழைய மாணவர்.

அச்செழு. (சி/7886)


# மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை கதிரித்தம்பி

இடைக்காட்டைப் பிறப்பிடமாகவும் அக்கராயனை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை கதிரித்தம்பி அவர்கள் அக்கராயனில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அக்கராயனில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தி. சந்திரகுமார்

இடைக்காடு,
அச்சுவேலி. (66605)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெளியுறவு அமைச்சர்களுக்கு இடையிலான பேச்சு தோல்வி அடைந்துள்ளதை அடுத்து இந்திய இராணுவ நடவடிக்கை தீவிரமாகும் அறிகுறி தென்படுவதாக அவதானிகள் கூறுகின்றனர். தனது இறைமையைப் பாதுகாக்கத் தயார் என்று பாகிஸ்தானும் தன்மீது போர் தொடுக்கப்பட்டால் அதை எதிர் கொள்ளத்தயார் என்று இந்தியாவும் கூறியுள்ளன. எல்லையில் இந்திய வீரர் ஒருவர் தனது ஆட்டிலறிப் பீரங்கியில் குண்டை பொருத்துவதை படத்தில் காணலாம். (ஐ)

# இந்திய - பாகிஸ்தான் பேச்சு தோல்வியில்

## மோதல் தீவிரமாகும் நிலை

புதுடில்லி, ஜூன் 14

காஷ்மீர் எல்லை நெருக்கடி தொடர்பாக பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் சர்தாஜ் அஸீஸுக்கும் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்த் சிங்கிற்கும் இடையே நேற்று முன் தினம் புதுடில்லியில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் எவ்வித முன்னேற்றமும் இன்றி முடிவடைந்தன.

கார்கில் பகுதியில் ஊடுருவல் காரர்களை வெளியேற்றுவதற்கு இந்தியா மேற்கொண்டுள்ள இராணுவ நடவடிக்கைகளை குறைத்துக் கொள்ள வேண்டும் என்று பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் சர்தாஜ் அஸீஸ் விடுத்த கோரிக்கையை இந்தியா அடியோடு நிராகரித்தது.

இராணுவ நடவடிக்கைகளை முழு அளவில் விலக்கிக் கொள்வதைத்தான் இந்தியா ஆதரிக்கின்றது. ஆனால் முதலில் இந்திய இராணுவ நடவடிக்கைகளுக்கு காரணமாக உள்ளவற்றை பாகிஸ்தான் விளங்கிக் கொள்ள வேண்டும் என்றும் ஜஸ்வந்த் தெரிவித்தார்.

''கார்கில் பகுதியில் இருந்து தனது இராணுவத்தையும் ஊடுருவல் காரர்களையும் விலக்கிக் கொள்வதைத் தவிர பாகிஸ்தானுக்கு மாற்று வழி ஏதுமில்லை,

ஜம்மு –காஷ்மீரில் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டை மீறமுடியாது என்பதையும்— அதற்கு மதிப்பு அளித்தே தீரவேண்டும் என்பதையும் பாகிஸ்தான் கருத்திற் கொள்ளவேண்டும்'' என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தப் பேச்சின்போது—

இந்திய இராணுவ வீரர்கள் ஆறு பேரை பாகிஸ்தான் சித்திரவதை செய்து கொலை செய்தது பற்றி இந்தியாவின் கோபத்தையும் ஆத்திரத்தையும் அஸீஸிடம் ஜஸ்வந்த்சிங் எடுத்துரைத்தார்.

இந்திய வீரர்கள் சித்திரவதை செய்யப்பட்டனர் என்றகுற்றச்சாட்டை பாகிஸ்தான் அமைச்சர் மறுக்கவில்லை என்று இந்தியத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது (ஐ-க)

# ஒருகோடி சதுர கிலோமீற்றர் பரப்பில் இந்துசமுத்திரத்தின் மேலே மாசுபட்ட மேகமூட்டம்!

புதுடில்லி, ஜூன் 14

இந்து சமுத்திரத்துக்கு மேலே இந்த ஆண்டின் ஆரம்பத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மாசுபடிந்த பெரும் மேகக்கூட்டத்தை தாங்கள் அளவிட்டிருப்பதாகச் சர்வதேச விஞ்ஞானிகள் குழு ஒன்று தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் பரப்பளவுக்குச் சமமாக இந்தப் புகைமூட்டம் சுமார் ஒரு கோடி சதுர கிலோ மீற்றர் பரப்பில் பரவியுள்ளதாக அவர்கள் கூறியுள்ளனர். இந்து சமுத்திரம், அரேபியக்கடல் மற்றும் வங்கக் கடலின் பெரும்பகுதி மீது இந்த மாசுபட்ட மேகமூட்டம் பரவியுள்ளது.

இந்தப் பிரமாண்டமான மேகக்கூட்டத்தில் கார்பன்மொனொக்சைட், மற்றும் இரசாயனப்பொருள்கள் உட்பட பல நச்சுப் பொருள்கள் கலந்துள்ளன. (ஐ)

# பிரதமர் வாஜ்பாய் நேற்று போர் முனைக்கு விஜயம்

ஸ்ரீநகர், ஜூன் 14

அமைச்சர்கள் மற்றும் படைத்தளபதிகள் சகிதம் பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாய் நேற்று காஷ்மீர் எல்லையின் கார்கில் பகுதிக்கு விஜயம் செய்தார்.

அவருடன் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ், இராணுவத் தலைவர் ஜெனரல் வி. பி. மாலிக், காஷ்மீர் முதல்வர் பாரூக்அப்துல்லா ஆகியோரும் பிரதமருடன் சென்றனர்.

பாகிஸ்தான் படையினர் ஊடுருவல் காரர்களை எதிர்த்து சண்டையிட்டுவரும் இந்தியப் படையினரை நேரில் சந்தித்த பிரதமர் வாஜ்பாய் அவர்களுக்கு வாழ்த்துக் கூறினார்.

ஸ்ரீநகரில் உள்ள இராணுவ மருத்துவமனைக்கும் பிரதமர் விஜயம் செய்தார்.

முன்னதாக ஸ்ரீநகரில் இருந்து வாஜ்பாயும் அவரது குழுவினரும் கார்கில் போய்ச் சேர்ந்த கையோடு அவர்கள் தங்கியிருந்த கிராமத்துக்கு அருகே அடுத்தடுத்து ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன.

நேற்று மாலை செய்தியாளர் மாநாடு ஒன்றில் பிரதமர் உரையாற்ற இருந்தார். (ஐ)

## பாப்பரசர் தடக்கி வீழ்ந்து தலையில் படு காயம்

வார்ஸோ, ஜூன் 14

போலந்தில் விஜயம் மேற்கொண்டிருந்த புனிதபாப்பரசர் அருளப்பர் சின்னப்பர் வைபவம் ஒன்றில் கலந்து கொண்டிருந்த சமயம் கால் தடக்கி தரையில் வீழ்ந்து தலையில் காயமடைந்தார். காயத்துக்கு மூன்று தையல்கள் போடப்பட்டன.

தனது சொந்த நாடான போலந்துக்கு கடைசி வெளிநாட்டுப் பயணமாகச் சென்ற பாப்பரசர் வார்ஸோ நகரில் உள்ள வத்திக்கான் தூதரகத்தில் இருந்த சமயமே இச் சம்பவம் இடம் பெற்றது.

தலையில் ஏற்பட்ட காயத்தினால் மூளைக்கு பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை என்று அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ)

## இரட்டைக் குழந்தைகள் 300 ரூபாவுக்கு விற்பனை!

கல்கத்தா, ஜூன் 14

பெற்றெடுத்த இரட்டைக் குழந்தைகளுக்கு பால்உணவு கொடுப்பதற்கு பணம் இல்லாததால் இந்தியப் பெண் ஒருவர் அக்குழந்தைகளை 300 இந்திய ரூபாகளுக்கு விற்றுள்ளார்.

பிரசவித்த சில மணிநேரங்களுக்குள்ளாகவே குழந்தைகள் விற்கப்பட்டுள்ளன.

ஜோதிராணி தாண்டி என்ற 40 வயது விதவைப் பெண்ணே குழந்தைகளை விற்றுள்ளார்.

திரிபுராவைச் சேர்ந்த இவரது கணவன் ஒரு தேயிலை தோட்ட தொழிலாளி. கடந்த ஏப்ரலில் அவர் மரணமானார். கடும் வரட்சி மற்றும் உணவுத் தட்டுப்பாடு காரணமாக வறுமையில் வாடிய சமயத்திலேயே இப்பெண் குழந்தைகளைப் பிரசவித்தார். (ஐ)

## புஷ்ஷின் மகன் உறுதி

டெக்சாஸ், ஜூன் 14

2 ஆயிரமாம் ஆண்டு நடைபெறவுள்ள அதிபர் தேர்தல் மூலம் எப்படியும் வெள்ளை மாளிகை செல்வேன் என்று முன்னாள் அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷின் மகன் ஜோர்ஜ் டபிள்யூ புஷ் (வயது 52) உறுதியாகத் தெரிவித்துள்ளார்.

டெக்சாஸ் மாநிலத்தின் ஆளுநராக உள்ள இவர் குடியரசுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட உள்ளார். (ஐ)

உலக அரங்கில்

## புனித யுத்தம் தொடருமென ஓசாமா பின்லேடன் அறிவிப்பு

அமெரிக்காவுக்கு எதிராக தான் மேற்கொண்டுள்ள புனித யுத்தம் (ஜிகாத்) தொடர்ந்து நடைபெறும் என்று சர்ச்சைக்குரிய சவுதி அரேபிய கோடீஸ்வரரும் அமெரிக்காவினால் அதிகம் தேடப்பட்டு வருபவருமான ஓஸாமா பின்லேடன் கூறியுள்ளார்.

கட்டாரை மையமாயகக் கொண்ட தொலைக் காட்சிக்கு அளித்த செவ்வியிலேயே மேற்கண்டவாறு பின்லேடன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் உளவுத்துறையினரால் இவ்வாரம் வெளியிடப்பட்ட 'தேடப்பட்டு வரும் 10 பேரில்' முக்கியமானவராகக் கருதப்படும் ஓஸாமா பெயர் குறிப்பிடப்படாத இடம் ஒன்றிலிருந்து கட்டார் தொலைக்காட்சிக்கு பேட்டியளித்துள்ளார்.

''நான் புனித யுத்தம் ஒன்றை மேற்கொண்டு புனிதமான இஸ்லாமிய நாட்டை விடுவிக்க உள்ளோம். நாம் யூத, கிறிஸ்தவ ஆக்கிரமிப்புக்கு எதிராக போராடுகிறோம். ஜெருசலேம் நகரில் உள்ள அல் அக்ஷா பள்ளிவாசல், சவுதி அரேபியாவில் உள்ள புனித மக்கா, மதினா நகரங்கள் ஆகியவற்றை விடுவிக்கப் போராடுகிறோம்.

# ஆயிரக்கணக்கில் நேட்டோபடைகள் கொசோவோ போய்ச் சேர்ந்தன!

## ரஷ்ய துருப்புக்கள் குறித்து சர்ச்சை

பிரசெல்ஸ், ஜூன் 14

11 வாரகாலம் நீடித்த நேட்டோவின் வான் தாக்குதல் இடை நிறுத்தப்பட்டிருப்பதைத் தொடர்ந்து நேட்டோ தரைப்படைகள் சர்வதேசப் படையாக கொசோவோவுக்குள் சென்று கொண்டிருக்கின்றன. சுமார் 6 ஆயிரம் துருப்புக்கள் நேற்று முன்தினம் அங்கு போய்ச் சேர்ந்ததாக அறிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில்—

நேட்டோ தாக்குதல் நிறுத்தப்பட்ட கையோடு— நேட்டோ படைகள் புறப்பட்டுச் செல்வதற்கு முன்னரே— ரஷ்யா தனது படைப் பிரிவு ஒன்றை கொசோவோவுக்கு அனுப்பியுள்ளது. ரஷ்யாவின் இந்த நடவடிக்கை நேட்டோவுக்கு அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது.

சுமார் 200 ரஷ்யப்படைவீரர்கள் தலைநகர், பிரிஸ்ரினாவில் விமான நிலையத்துக்கு அருகே நிலைகொண்டுள்ளனர். அங்கிருந்து அவர்களை வெளியேறுமாறு உத்தரவிடப்பட்டிருப்பதாக ரஷ்யப் பிரதமர் அலுவலம் அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்ட போதிலும் ரஷ்யப் பாதுகாப்பு அமைச்சு அதனை மறுத்திருந்தது. இதனால் ஏற்பட்ட சர்ச்சை குறித்து மொஸ்கோவுடன் பேச்சு நடத்தப்படுவதாக நேட்டோ தலைமையக வட்டாரங்கள் தெரிவித்தன.

கொசோவோவில் உள்ள ரஷ்சியப் படைகள் தொடர்பாக அமெரிக்க அதிபர் பில்கிளின்ரனும், ரஷ்ய அதிபர் போறிஸ் யெல்ட்சினும் நேற்று தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பேச்சு நடத்த இருந்தனர். (ஐ-க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

கையில் கொண்டு செல்லக் கூடிய நல்ல நிலையில் உள்ள ஆங்கில தட்டச்சு இயந்திரம் (Olivetti Model) விற்பனைக் குண்டு. தொடர்பு: இ. தளையசிங்கம், 382, கோயில் வீதி, சிவன் – அம்மன் வீதி சந்தி, நல்லூர் வடக்கு. (66569)

நீராவியடி பிறவுண் வீதியில் இரண்டே முக்கால் பரப்பு வெறுங்காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: க. கணேசலிங்கம், 30, குமாரசாமி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (சி/7885)

## கைவரைப்பலன்

அறிவியல் அடிப்படையில் செம்மையான பலன் அறியவும் கைகளை ஒப்பிட்டு பங்காளர் பொருத்தம் காணவும் உளவியற் குறைபாடுகளை அறியவும் தொடர்பு: கைவரை வல்லுநர், சரசாலை வடக்கு, சாவகச்சேரி. (சி/7876)

## திருத்துதல்

சகல கமரா வகைகளும் எலக்ரோனிக் பிளாஸ், மூக்குக்கண்ணாடி ஒட்டுதல், புகைப்படத்துறை துணைச் சாதனங்களும் திருத்திக் கொடுக்கப்படும். தொடர்பு: சு. நாராயணசாமி, இல. 301, கஸ்தூரியார் வீதி, மேல் மாடி, (கன்னாதிட்டிச் சந்தி அருகில்) யாழ்ப்பாணம். (66595)

## யாழ்ப்பாணம்

பல்வேறு சுவைகளைத் தரும் பத்துச்சிறு கதைகளும், சிறுகதை இலக்கியத்தின் சிறப்பை விளக்கும் ஒருகட்டுரையும், 300 நாடகங்களும், 50 சிறுகதைகளும் எழுதிய அராலியூர் சுந்தரம்பிள்ளையின் நூல். ரூபா 50. (66596)

# விண்ணப்பப் படிவம் விநியோகம்

தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சி நெறிக்கான விண்ணப்பப்படிங்கள் இந்துக் கல்லூரி தொலைக் கல்வி நிலையத்தில் 18ம் திகதி வெள்ளிக்கிழமையும் 19 ஆம் திகதி சனிக்கிழமையும் காலை 9 மணி தொடக்கம் 11 மணி வரை விநியோகிக்கப்படும் என சிரேஷ்ட போதனாசிரியர் எஸ். சரவணமுத்து அறிவித்துள்ளார். (ஐ-11)

ஏற்றுமதியை அடுத்து

# வெங்காயத்துக்கு இங்கு கிராக்கி அதிகரிப்பு

வடமராட்சி ஜூன் 14

வெங்காயம் கப்பல் மூலம் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்படுவதை அடுத்து இங்கு வெங்காயத்துக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது.

வர்த்தகர்கள்பலரும் வெங்காயத்தை கொழும்புக்கு எடுத்துச் செல்வதில் ஆர்வம் காட்டி வருவதால் வெங்காயத்தின் விலையும் அதிகரித்து வருகிறது.

தற்போது ஒரு அந்தர் வெங்காயம் 2 ஆயிரம் ரூபா முதல் 2 ஆயிரத்து 500 ரூபா வரை விலை போகிறது.

குடாநாடு படையினரின் கட்டுப்பாட்டுக்குள் வந்ததைத் தொடர்ந்து விவசாயிகளுக்கு வெங்காய விற்பனையில்குறைந்த பட்ச அதிக விலை கிடைப்பது இதுவே முதற்றடவையாகும்.

இதே வேளை –

தற்போது பருத்தித்துறையில் தரித்துள்ள 'ஹெந்தல' கப்பலில் ஒரு தொகுதி வெங்காயம் கொழும்புக்கு எடுத்துச் செல்வதற்காக ஏற்றப்பட்டு வருகின்றது.

இக்கப்பல் நாளைமறுதினம் கொழும்புக்கு புறப்பட்டுச் செல்லும். (ஐ-173-118)

# உரும்பிராய், ஊரெழுப் பகுதி விவசாய உற்பத்திச் சங்கம்

அரியாலை, ஜூன் 14

உரும்பிராய், ஊரெழு பகுதிகளை உள்ளடக்கிய விவசாய, உற்பத்தி நுகர்ச்சிச் சேவைக்கூட்டுறவுச் சங்கம் சம்பிரதாய பூர்வமாக கடந்த வியாழனன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சங்கத்தலைவர் இ. நடராசா தலைமையில் நடைபெற்ற விழாவில் வடக்கு–கிழக்கு மாகாண கூட்டுறவு ஆக்க ஆணையாளர் கே. சண்முகலிங்கம்மேற்படி சங்கத்தை திறந்து வைத்தார்—

கோப்பாய் பிரதேச செயலர் க. கேதீஸ்வரன், கூட்டுறவு அபிவிருத்திஉதவி ஆணையாளர் கே. சண்முகநாதன், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (கணக்காய்வு) திருமதி கோ. திருநாவுக்கரசு, மாவட்ட கிராமிய வங்கிகளின் சமாசத்தலைவர் சீ.வீ. கே. சிவஞானம், மாவட்ட கூட்டுறவுச்சபைத் தலைவர் பெ. கனகசபாபதி ஆகியோரும் விழாவில் கலந்து கொண்டனர். (ஐ-17)

# ஈராண்டு நினைவலைகள்



## அமரர் அப்பையா ஜெயராசா

அன்னையின் மடியில் 08-08-58

ஆண்டவன் அடியில் 14-06-97

ஈராண்டு சென்றது ஐயா
இன்முகத்தை கண்டு நாங்கள்
காலம் எல்லாம் உம் நிழலில்
வாழ்வோம் என நம்பி நின்றோம்
தீயவரின் தீண்டுதலாய்
திடீர் மரணம் வந்ததேனோ
தீராத கவலையுடன்
எம்மை விட்டு சென்றதேனோ?

ஆத்ம சாந்திக்காக உங்களுக்காக என்றென்றும் பிரார்த்திக்கின்றோம்.

தாய், சகோதரர்கள், மனைவி, பிள்ளைகள்.

7/1, அன்னசத்திர ஒழுங்கை,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(66597)

புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட

# பொருள்கள் விற்பனைக்கு

SONY G. 21 T.V
PANASONIC 220 AMJ DECK
SONY ED. DECK
CEILING FAN
SONY G. 14 T.V
PANASONIC 235 AM DECK
FILM ROLE
பழைய பாடல்கள் கொண்ட AUDIO CD கள்

என்பவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள வேண்டிய

முகவரி: **அருண் வீடியோ மூவி**
பிரதான வீதி — நெல்லியடி.

[66571]

# வலய இணைப்பாளரே வருக!

யாழ். மாவட்ட கல்வி வலயங்களின்
நிர்வாக இணைப்பாளராக நியமனம் பெற்ற
யாழ்ப்பாண வலயக் கல்விப்பணிப்பாளர்

கல்வியியல் கலாநிதி

## ச. நா. தணிகாசலம்பிள்ளை

அவர்களே!


ஐந்து வலயங்களின் இணைப்பாளராய்
ஆளுமை மிக்க பணிப்பாளராய்
இந்த கல்விமாநிலத்தின் அமைப்பாளராய்
ஈழம் கண்ட கல்வித்துறை நிர்வாகியாய் —
வந்தே
தந்திடும் சேவையை ஏற்கிறோம்.
தமிழ்ப்பணி காத்திட வாழ்த்துகிறோம்.
சொந்தமாம் எங்கள் கல்வி உலகிற்கு
சுபீட்சம் உங்களால் கிடைக்கட்டும்.

—கல்விப்பணி சிறக்க வாழ்த்துவோர்:

**கல்வி கலை இலக்கிய கலாசாரப் பேரவை**

(66564)

# இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்




(சி/7872)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பிகை
## தொலைத் தொடர்பு நிலையம்
நாவலடி அல்வாய் வடக்கு, அல்வாய்.

**இரவு பகல் சேவை**

தங்குமிட வசதியுடன்

உள்நாட்டு இல. 070 – 212492
வெளிநாட்டு இல. 0094 – 70–212492.

சி. கணேசமூர்த்தி
உரிமையாளர்.
(சி/7882)


## கண்ணீர் அஞ்சலி

எமது நடன ஆசிரியை
கலாரத்ன திருமதி ஞானமணியின் அன்புக் கணவர்

**கா. சி. செல்லையா**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

– மாணவிகள்
திருமதி கணேசநாதன் ஞானசக்தி
செல்வி ஆனந்தசக்தி தணிகாசலம்

திருநெல்வேலி.
(66592)

## வேலணை பிரதேச சபை
வீடமைப்பு நகர
சீர்திருத்தக் கட்டளைச் சட்டம்
(பிரிவு 268) இன்

## பிரகாரமான அறிவித்தல்

வேலணைப் பிரதேச சபையின் அனுமதியின்றி சபை நிர்வாக எல்லைக்குள் கட்டடங்கள் கட்டுதல், புதுப்பித்தல், வேலைகள் செய்தல், வீதியோர எல்லைச் சுவர்கள் அமைத்தல் என்பன சட்டத்தின் படி தண்டனைக்குரிய குற்றமாகும்.


ஆகவே கட்டடங்கள் கட்டுவதற்கும், பழைய கட்டடங்களைப் புதுப்பித்தலுக்கும், வீதியோர எல்லைச் சுவர்கள் அமைப்பதற்கும் பிரதேச சபையிலிருந்து பெறப்படும் விண்ணப்பப் படிவத்தின் மூலம் விண்ணப்பம் செய்து வேலணைப் பிரதேசசபைத் தலைவரின் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும், என்பதை இத்தால் அறியத் தருகின்றேன். மேலதிக விவரங்களைத் தலைமை அலுவலகத்திலும் புங்குடுதீவு, நயினாதீவு, வேலணை, அல்லைப்பிட்டி, மண்டைதீவு உபஅலுவலகங்களிலும் அறிந்து கொள்ளலாம்.

திரு. ந. கருணாகரகுருமூர்த்தி,
தலைவர்,
வேலணை பிரதேச சபை.

வேலணை பிரதேச சபை,
வேலணை 31–05–99

[சி/7853[

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 01 – 09 – 1978

உதிர்வு 10 – 06 – 1998

**அமரர் சின்னத்துரை சுதர்சன்**
(மாம்பழம்)

திதி: 14 - 06 - 1999

மொட்டு மலர்ந்து காயானாய் - கனியமுன் எம்மைவிட்டுப் பிரிந்தனையே! உன் நினைவால் நாம் வாடுகிறோம். உடலால் எம்மைவிட்டுப் பிரிந்தாலும் உணர்வால் என்றும் எம்முடன் உன் நினைவுகள் தொடரும்.

குடும்பத்தார்,
நண்பர்கள்.

மருதங்குளம்,
மட்டுவில்தெற்கு,
சாவகச்சேரி.
(சி/7766)

## உடற் கல்விப் போட்டி

வலிகாமம் தெற்கு, ஜூன் 14

வலிகாமம் கல்வி வலயப் பிரிவு ரீதியான பாடசாலை அணிகளின் உடற் பயிற்சிப் போட்டிகள் இன்றும் நாளையும் நடைபெற உள்ளன.

பிரிவு மூன்றுக்கான போட்டிகள் உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ. வி. கணேசலிங்கம் தலைமையில் இன்று யூனியன் கல்லூரியிலும்—

பிரிவு இரண்டுக்கான போட்டிகள் உதவிக் கல்விப் பணிப்பாளர் அ. தற்பரானந்தன் தலைமையில் நாளை கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியிலும்—

நடைபெறும். (ஐ–152)

## முன்பள்ளி புனரமைக்க நிதி உதவி

வலிமேற்கு, ஜூன் 14

'யுனிசெவ்' நிறுவனத்தினர் சிறுவர் முன்பள்ளிக்கான உதவித்திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு சங்கானை பிரதேச செயலர் பிரிவிலுள்ள இரண்டு முன் பள்ளிகளுக்கு கட்டடங்களை மக்கள் பங்களிப்புடன் அமைப்பதற்கு ஒன்றரை லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

வட்டு. வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள கண்ணன் முன்பள்ளிக்கு ஒரு லட்சம் ரூபாவும்-

அராலி வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள பாரதி முன்பள்ளிக்கு 50 ஆயிரம் ரூபாவும் —

யுனிசெவ் நிறுவனத்தினர் ஒதுக்கியுள்ளனர். கடந்த ஆண்டும் அராலி கிழக்கு கலைமகள் முன்பள்ளிக்கு 50 ஆயிரம் ரூபாவை வழங்கியது குறிப்பிடத்தக்கது.( ஐ–175)

## இடைக்கால சபை

கொழும்பு, ஜூன் 14

கிரிக்கெட் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்கென இடைக்கால சபை ஒன்றை விளையாட்டுத்துறை அமைச்சர் எஸ். பி. திஸநாயக்க நியமித்துள்ளார்.

கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் அதிகாரிகள் தமது கடமைகளை மேற்கொள்வதற்கு நீதிமன்றம் விதித்துள்ள தடையை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (இ–5)

## பழுதடைந்த பலாப் பழங்கள் அழிப்பு

தென்மராட்சி, ஜூன் 14

சாவகச்சேரி சந்தைக்கு கடந்த சனிக்கிழமை விற்பனைக்கு கொண்டு வரப்பட்ட பழுதடைந்த பலாப் பழங்கள் சுகாதாரத் திணைக்கள அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டன.

பழுதடைந்த பழங்களால் நோய்கள் பரவும் அபாயம் உள்ளதால் அவற்றினை விற்பனைக்கு கொண்டு வர வேண்டாமென சுகாதாரப் பகுதியினர் அறிவுறுத்தியுள்ளனர். (ஐ–117)


## தேவை

ஆங்கில மருந்து விற்பனையில் அனுபவமுள்ள பெண் விற்பனையாளர் தேவை.

**புதிய குறிஞ்சி மெடிக்கல்ஸ்,**
பரமேஸ்வராச்சந்தி,
திருநெல்வேலி.
[illegible] 2936
(66553)

உலகப் பிரசித்தி பெற்ற றோல்ஸ் றோயிஸ் காரில் பாவிக்கும்

# டெகனைற் (DAGENITE)

பற்றறிகளை நீங்கள் ஏன் பாவிக்கக்கூடாது? எல்லாத் தரத்திலும் தேவைக்கு ஏற்ப பற்றறிகள் கைவசம் உண்டு. உத்தரவாதத்துடன் (Guarantee) பெற்றுக் கொள்ளலாம்-

விற்பனையாளர்கள்:

**துரை அன் கோ,**
23/3 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
**THURAI & CO**

TEL: 2729
[66554]


## வேலணைப் பிரதேச சபை
வேலணை

## வேலைகளுக்கான ஒப்பந்தகாரரைப் பதிவு செய்தல்

வேலணைப் பிரதேசசபை நிர்வாக எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் கேள்வி நடைமுறைகள் மூலம் வேலைகள் செய்ய விரும்பும் ஒப்பந்தகாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் என்னால் கோரப்படுகின்றன.

கீழ்க்குறிப்பிட்ட ஆவணங்களை அலுவலகத்தில் சமர்ப்பித்து மீளளிக்கப்படாத விண்ணப்பக் கட்டணமாக ரூபா 100 உம் மீளளிக்கப்படக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 10,000 செலுத்துவதன் பேரில் இச்சபையின் வேலை ஒப்பந்தகாரராகத் தங்களைப் பதிவு செய்து கொள்ளலாம்.

1. ரூபா 5 (ஐந்து) லட்சத்துக்கான சொத்துக்களின் சான்றிதழ்.
2. வியாபாரப் பதிவுச் சான்றிதழ்
3. இக்ராட் பதிவுச் சான்றிதழ்
4. பொருள்கள், சேவைகள் வரிப்பதிவுச் சான்றிதழ்
5. தொழில் நுட்பத் தகுதிச் சான்றிதழ்
6. வீதி அபிவிருத்தி அதிகார சபை/ வீதி அபிவிருத்தித் திணைக்களம்/ மாநகர/ நகர/ பிரதேச சபைகள் / கட்டடம்/ நிர்மாணத் திணைக்களம்.
7. தொழில் நுட்பம் / வாகனங்கள்/ உபகரணங்களின் ஆளணி முதலியவற்றின் சான்றிதழ்.

இச்சபையுடன் பதிவு செய்து கொள்ளும் ஒப்பந்தகாரர்களைத் தவிர, வேறு எந்தத் தனிநபருக்கோ அல்லது தாபனங்களுக்கோ இனி வரும் காலங்களில் ஒப்பந்த வேலைகள் தொடர்பில் கேள்விப்படிவங்கள் விநியோகிக்கப்பட மாட்டாது.
பதிவுகள் யாவும் 18-06-99 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

திரு. ந. கருணாகரகுருமூர்த்தி
தலைவர்
வேலணைப் பிரதேச சபை.

வேலணை பிரதேசசபை,
வேலணை.
(சி/7854)

## 180- ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 19 – 07 – 1972

மறைவு 16 – 12 – 1998

செல்வி
**ஆழ்வாப்பிள்ளை பரமேஸ்வரி**

முத்திப் பழுத்தபழம் முதிர்வதற்குத் தவிக்கின்றது.
பிஞ்சுகளோ வளர்வதற்கு பிழைக்கவழி வேண்டுமென
பருவமதில் உன் உடலைப் பக்குவமாய் வளர்த்தெடுத்தேன்
காலம் அது செய்கையிலே காலன் அவன் குறுக்கிட்டான்
இதுதான் விதியென இப்பொழுதே உணர்ந்து கொண்டேன்.

இன்று (14-06-99) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் கிரியையிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வேண்டிக் கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்;
குடும்பத்தினர்,

மத்தொனி,
கரவெட்டி.
(66524)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிற்போடப்பட்டுள்ளது

மானிப்பாய் பரிஷ்
விளையாட்டுக் கழகத்தினால்
நடத்தப்படவிருந்த


**அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு**

தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளது. திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

(66573) - தலைவர்

## நீங்காத ஓராண்டு நினைவுகள்

தரையினில் 15 — 07 — 1929



இறையினில் 14 — 06 — 1998

### அமரர் எஸ். ஆர். இரத்தினசிங்கம்

[ஓய்வு பெற்ற ஆசிரியர், ஸ்ரீலங்கா கனிஷ்ட கிரிக்கெட் சபையின் முன்னாள் செயலர்]

திங்களுக்குள் பூரணைபோல் எங்களுக்குள் நீங்கள் தானே
கண்களுக்குள் நீர் நிறைத்துக் காலமெல்லாம் நாம் அழவா
எங்களுக்குச் சொல்லாமல் யேசுவோடு சேர்ந்திட்டீர்கள்
மங்கலுக்குள் எம்மை ஆழ்த்தி மறைந்திட்டீர்கள் சொல்லிடுங்கள்

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

155, ஆசீர்வாதப்பர் வீதி,
அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம்.

(66572)

## 6 ஆம் வருட நினைவஞ்சலி

பிறப்பு 02 — 02 — 1936



இறப்பு 14 — 06 — 1993

அமரர்

### பே. கபிரியல்பிள்ளை

(செல்வரெட்ணம்)

(இளைப்பாறிய கடற்படை உத்தியோகத்தரும், யாழ். பல்கலைக்கழக ஜிம்னாஸ்ரிக் பயிற்சியாளரும்)

அப்பாவே அப்பாவே எமதருமை அப்பாவே ஜிம்னாஸ்ரிக் பழக்கிட பல்கலைக்கழகம் சென்று வந்தீர் அத்துடன் கூடைப்பந்தாட்டமும் ஆடி வந்தீர். அன்றொரு நாள் சென். பற்றிக்ஸ் அணியுடன் யாழ். பல்கலைக்கழக அணிக்காக கூடைப்பந்தாட்டம் ஆடச் சென்றீர் அதுதான் உங்கள் கடைசி விளையாட்டு என்று யாரும் அறியவில்லை. தெரிந்தோ, தெரியாமலோ யாரோ ஒருவர் வயிற்றில் அடித்தார். ஆனால் நீங்கள் பெரிசாக எடுக்கவில்லை. ஆனால் நாங்கள் வைத்தியசாலை கொண்டு சென்றோம். சத்திரசிகிச்சை செய்யப்பட்டது. உயிரைக் காப்பாற்றி விட்டோம் என்ற நிம்மதியுடன் வீடு சென்றோம். ஆனால் உயிர் பிரிந்த செய்தியை நாம் அறிந்தோம். ஏங்கி நின்றோம், கதறிநின்றோம், தவித்துநின்றோம். உங்களை இழந்தாலும் அம்மா இருக்கிறா என்ற மனநிம்மதியுடன் இருந்தோம். அம்மாவும் நிம்மதியற்று இருவருடத்தில் உங்கள் வழி தொடர்ந்து விட்டா. இப்போது நாங்கள் யாரிடம் செல்வோம். இறைவா என்று தினமும் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கும் உங்கள்

மருமகன், மக்கள், பேரப்பிள்ளைகள்.

யோ. கிறிஸ்ரியன்
40, 5 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

(66533)

## இந்து இளைஞர் மன்றம் புனரமைப்பு

அரியாலை, ஜூன் 14

கொழும்புத்துறை மேற்கு இந்து இளைஞர் மன்றம் புனரமைக்கப்பட்டுள்ளது.

மன்றத்தின் தலைவர் பொ. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்ற புனரமைப்புக் கூட்டத்தில் நடப்பு வருடத்திற்கான புதிய நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. (ஐ–17)

## பார்வையிட்டார்

அரியாலை, ஜூன் 14

யாழ். நகரில் புனரமைக்கப்பட்டு வரும் யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமையலுவலகம், வீரசிங்கம்மண்டபம் போன்ற கட்டடங்களை வடக்கு — கிழக்கு மாகாண கூட்டுறவு ஆக்க ஆணையாளர் கே. சண்முகலிங்கம் வெள்ளியன்று பார்வையிட்டார். (ஐ–17)

## இன்று மங்களகரமான ஆரம்பம்

**குளோபல்** தொலைத் தொடர்பு சேவை

உடுவில் வீதி, மானிப்பாய்.
[றோஸ் பிராண்ட் சமீபமாக]

உள்ளூர் இல: 021 – 2978
வெளியூர் இல: 0094–21–2978

இரவு பகல் சேவை

[66594]

## கணண் கொமினிக்கேசன்

ஆவரங்கால், புத்தூர்.

தங்குமிட வசதியுடன் கூடிய இரவு பகல் தொலைத் தொடர்பு சேவை,

உள்நாட்டு இல. 070 – 212493
வெளிநாட்டு இல. 0094 – 70-212493

(சி/7881) – நிர்வாகம்

உ

சாவகச்சேரி – டச் வீதி

## அருள்மிகு ஸ்ரீ பழனி ஆண்டவர் ஆலயத்தின்

28 – 07 – 99 (புதன்) பிற்பகல் 2.30 மணியளவில் நடைபெறும்

**8ஆவது ஸ்ரீ பழனி வேல் பவனியை**

முன்னிட்டு நடத்தப்படும்

# சிறப்புப் போட்டிகள் - 1999

### பேச்சுப் போட்டி

சாவகச்சேரி பல நோக்கு கூட்டுறவுச்சங்க ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் ஆதரவில்
நடத்தப்படும் இப்போட்டி 1, 2, 3 ஆம் பிரிவினர்களுக்கு 28 – 06 – 99 காலை 8-30 மணியளவிலும், 4, 5, 6 ஆம் பிரிவினர்களுக்கு மாலை 2-00 மணியளவிலும், 7 ஆம் பிரிவினருக்கு 29 – 06 – 99 மாலை 3-00 மணிபளவிலும்
மேற்படி ஆலய முன்றலில் நடைபெறும்.

### கட்டுரைப்போட்டி

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் ஆதரவில்
நடத்தப்படும் இந்தப்போட்டி
சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலய மண்டபத்தில் 10 - 07 - 99 இல், 4, 5, 6, 7 ஆம் பிரிவினர்களுக்கு பிற்பகல் 3. 00 மணியளவில் நடைபெறும்.

### சமய அறிவுப் போட்டி

சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் ஆதரவில்
நடத்தப்படும் இந்தப்போட்டி
சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலய மண்டபத்தில் 11 - 07 - 99 இல், 3, 4, 5, 6, 7 ஆம் பிரிவினர்களுக்கு பிற்பகல் 3. 00 மணியளவில் நடைபெறும்.

### பண்ணிசைப் போட்டி

சாவகச்சேரி நகரசபையின் ஆதரவில்
நடத்தப்படும் இந்தப்போட்டி
மேற்படி ஆலய முன்றலில் 17 - 07 - 99
பிற்பகல் 2. 30 மணியளவில் 4, 5, 6, 7 ஆம் பிரிவினர்களுக்கு நடைபெறும்.
[ விரும்பிய பஞ்சபுராணம் ஓதுதல் வேண்டும் ]

## போட்டி விதிகள்

1) தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவு எல்லைக்கு உட்பட்ட மாணவர்கள் பங்குபற்றலாம்.

2) விண்ணப்பிக்க விரும்புவோர் தனித்தனி விண்ணப்பங்கள் தயாரித்து **25 - 06 - 99 -க்கு முன்னதாக தலைவர்/செயலாளர் அவர்கள், ஸ்ரீ பழனி ஆண்டவர் ஆலய பரிபாலனசபை, டச்வீதி, சாவகச்சேரி** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

3) விண்ணப்பதாரர் மாணவரென பாடசாலை அதிபர், / ஆசிரியர்கள் அவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட சிபார்சுடன் அனுப்பி வைத்தல் அவசியம்.

4) போட்டிகள் குறிப்பிட்ட தினத்தில், குறிப்பிட்ட நேரத்தில் நடைபெறும்.

இது பற்றிய சுற்றறிக்கை தென்மராட்சியிலுள்ள சகல பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதால் சைவநெறிப் பாட ஆசிரியர்களும், சைவப் பெற்றோர்களும், சைவசமயக் குருக்கள்மாரும் இதற்கு உறுதுணையாக அதிபர்களும் சைவசமயத்தின் தொன்மையையும், பெருமையையும் மீண்டும் நிலைநாட்டுவதற்கு இந்த அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மாணவர்களை ஊக்குவித்துப் பயன் பெறச் செய்தாலே நாம் சைவத்துக்கு இந்நாளில் செய்யும் தொண்டாகும்.

அத்துடன் 28—07—99 பிற்பகல் 2. 30 மணியளவில் நடைபெறும் 8 ஆவது ஸ்ரீ பழனி வேல் பவனிக்கு ஆசார சீலர்களாக வருகை தந்து எமது வேல் பவனியைச் சிறப்பித்தும் ஸ்ரீ பழனி ஆண்டவரின் அருளைப் பெற்றேகுமாறு பணிவன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

(சி/7875) **- பரிபாலன சபை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## இரு வகை ஜனநாயகமா?

பெரும்பான்மை சிங்கள மக்களுக்கு ஒரு ஜனநாயகம், சிறுபான்மை மக்களுக்கு இன்னொரு வகையான ஜனநாயகம் என்று இந்த நாட்டில் இரண்டு வகை ஜனநாயகம் உண்டு.

கொழும்பில் பெரும் இன வெறியைக் கக்கி அடாவடித்தனம் புரிந்த ''சிங்கள வீர விதஹன'' இயக்கத்தைக் கண்டித்து தமிழர்களின் எதிர்ப்பைத் தெரிவிப்பதற்கு நடத்த உத்தேசிக்கப்பட்ட ஆர்ப்பாட்ட ஊர்வலத்திற்குப் பொலிஸார் அனுமதி மறுத்திருந்தனர் அல்லவா?

அது குறித்துக் கருத்துத் தெரிவித்த முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணிப் பிரமுகர் முஜிபுர் ரகுமான் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

குட்டக் குட்டக் குனிபவனும் மடயன்; குனியக் குனியக் குட்டுபவனும் மடயன் என்பார்கள். அதனால் தமிழர்களுக்கு எதிரான இனவெறியைத் தூண்டும் பேரினவாதிகளுக்கு எதிர்ப்பும் அவர்கள் நடத்தைக்குக் கண்டிப்பும் தெரிவிக்க வேண்டும் என்ற கருத்துடையவர்களே ''வீரவிதஹன''வுக்கு எதிராக ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்த ஏற்பாடு செய்தார்கள்.

இத்தகைய ஊர்வலம் சிங்கள — தமிழ் மக்களிடையே இனத்துவேசத்தைத் தூண்டும் என்று கருதுவோர் ஆர்ப்பாட்டம் நடத்தும் முடிவை ஆதரிக்கவில்லை என்பது வேறு புறம்.

''சிங்கள வீரவிதஹன அமைப்பு ஊர்வலம் நடத்தி ஓர் அலுவலகத்திற்குள் அத்துமீறி நுழைந்து அங்கு பறந்து கொண்டிருந்த கொடியை இறக்கி எரிக்க ''உரிமை'', 'சுதந்திரம்' இருக்குமெனில்—

தமிழர் தரப்பு அதற்குக் கண்டனம் தெரிவிக்க ஊர்வலம் நடத்த அனுமதி இல்லை என்றால்—இரண்டு வகை ஜனநாயகம் இந்த நாட்டில் உண்டு என்பதே அர்த்தம்.

ஆனால் —

ஏட்டிக்குப் போட்டியான நடவடிக்கையால் வீண் குழப்பங்கள், கலவரங்கள் உண்டாகும்; எதிர்ப்பு ஊர்வலத்தின் விளைவாகத் தமிழர்களே ஏதோ ஒருவகையில், மறைமுகமாகவேனும் பாதிக்கப்படுவார்கள்; என்ற பக்கத்தையும் மறந்து விடலாகாது.

இன ஒற்றுமைக்கும், தமிழர் உரிமைகளுக்கும், சமத்துவத்துக்கும் உழைக்கப் போவதாக உறுதி கூறிப் பதவிக்கு வந்த அரசின் ஆட்சியில் இரண்டு வகை ஜனநாயகம் இருக்கலாமா? அதனை அரசு அனுமதிக்கலாமா?

''வீரவிதஹன'' போன்ற பேரினவாத, இனத்துவேச அமைப்புகளை சட்டத்தின் துணை கொண்டு அடக்க முடியவில்லை என்றால்அரசு இரண்டு வகை ஜனநாயகத்துக்கு உடந்தை என்பதே அர்த்தம்!

இரண்டு வகை ஜனநாயகத்துக்கு உடந்தை என்றால் பேரினவாதத்துக்குத் துணை போதல் என்றும் ஆகிவிடும்.

இரண்டுவகை ஜனநாயகத்தை அரசு அனுமதிக்காதிருக்க அழுத்தம் போடுவதற்கு. மாதாந்தம் நாடாளுமன்றத்துக்கு முன் வரும் அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணையைத் தமிழ் எம்.பிக்கள் எல்லோரும் சேர்ந்து தோற்கடிப்பதுதான் உகந்தவழி— சிறந்தவழி.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்ற வாசகம் கேட்டவுடனேயே, பேரினவாதம் பிசாசாக எழுந்து கோரத்தாண்டவம் ஆடுவது இந்நாட்டு வழக்கம்.

மீண்டும் அது தலைவிரித்தாடினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை உணரமுடியாது, அதனைத் தடுக்குமாறு அரசுக்கு நிர்ப்பந்தம் கொடுக்கவேணும் தமிழ் எம்.பிக்கள் உழைக்காவிடில் அவர்கள் வேறு சாரார்ரைப் பிரதிநிதித்துவம் செய்பவர்கள் என்றே கருதப்படுவர்.

---

### குடாநாட்டில் 'கெயர்' உதவியுடன்

# 10 குளங்கள் மற்றும் 1 அணைக்கட்டு புனரமைக்க 28 லட்சம் ரூபா ஒதுக்கீடு

'கெயர்' நிறுவனம் விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்காக இந்த ஆண்டு யாழ். குடாநாட்டிலுள்ள பத்துகுளங்களையும் அணைக்கட்டு ஒன்றையும் புனரமைப்பதற்கு 27 லட்சத்து 90 ஆயிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

சாவகச்சேரி பிரதேச செயலர்பிரிவில்சாவகச்சேரிவடக்கிலுள்ள எஸ். டபிள்யு. ஈ அணைக்கட்டுக்கு 4 லட்சம் ரூபாவும் —

தனங்கிளப்பு பெரிய தாவைக் குளத்துக்கு 4 லட்சம் ரூபாவும்—

கச்சாய் குளத்துக்கு மூன்றரை லட்சம் ரூபாவும்—

மட்டுவில் முதலிய வேலிக் குளத்துக்கு ஒரு லட்சம் ரூபாவும்—

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இருபாலை கிழக்கு கரவெடியன் குளத்துக்கு இரண்டரை லட்சம் ரூபாவும்—

சிறுப்பிட்டி கிழக்கு அம்பலத்தலுவு குளத்துக்கு 3 லட்சம் ரூபாவும் —

சங்கானை பிரதேச செயலர் பிரிவில் அராலி வடக்கு கொட்டனக் குளத்துக்கு 3 லட்சம் ரூபாவும்—

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மாதகல் குடாக்கரைக் குளத்துக்கு 2 லட்சம் ரூபாவும்—

பளை பிரதேச செயலர் பிரிவில் பளை சிறுமாசர் குளத்துக்கு ஒன்றரை லட்சம் ரூபாவும் —

மிருசுவிலிலுள்ள சுருவில் குளத்துக்கு ஒரு லட்சத்து 90 ஆயிரம் ரூபாவும்—

ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

குளங்களையும் அணைக்கட்டையும் புனரமைக்கும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

விவசாய சம்மேளனங்கள் ஐக்கிய நாணயசங்கங்கள் மற்றும் பொது அமைப்புக்கள் ஆகியவற்றின் உறுப்பினர்கள் இந்த புனரமைப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். (ஐ-175)

# முறையான அங்கீகாரத்துக்கு திருமணப் பதிவு அவசியம்

## மேலதிக பதிவாளர் நாயகம் அறிவுறுத்து

கைதடி, ஜூன் 14

திருமணப் பதிவு என்பது தம்பதியரை சட்டப்படி இணைப்பதுடன் உங்களுக்கும் உங்களது பிள்ளைகளுக்கும் இந்த நாட்டில் முறைப்படியான அங்கீகாரத்தைப் பெற்றுத்தரும் நன் முயற்சியாகும்.

இவ்வாறு யாழ். மாவட்ட மேலதிகப் பதிவாளர் நாயகம் நா. சதாசிவஐயர் கூறினார்.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் தென்மராட்சி ப. நோ. கூ. சங்க மண்டபத்தில் இதுவரை திருமணப் பதிவினை மேற்கொள்ளாத தம்பதிகளுக்கான திருமணப் பதிவினை மேற்கொள்ளும் வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய மேலதிகப் பதிவாளர் நாயகம் மேலும் கூறியதாவது.

கிராமப் புறங்களில் பழைய பழக்க வழக்கங்கள் இன்றும் நின்று நிலவுவதாலேயே பதிவில்லாத இத்தகைய திருமணங்கள்நடைபெறுகின்றன.

எமது முன்னோர் அம்மி மிதித்து அருந்ததி பார்த்து சபையோர் முன்னிலையில் ஓமம் வளர்த்துச் சிவாச்சாரியார் எடுத்துக் கொடுத்த தாலியை இறை நம்பிக்கையுடன் மதித்து வாழ்ந்தார்கள்.

ஆனால் இன்றைய சமூக அமைப்பில் தேச வழமையுடன் சட்ட முறைப்படியும் நாம் நடக்க வேண்டிய கடப்பாடுடையவர்களாக இருப்பதால் திருமணப் பதிவு கட்டாயமானதாகும்—என்றார்.

இந்த நிகழ்வில் கைதடியைச் சேர்ந்த ஆறு கிராம சேவையாளர் பிரிவில் உள்ள 60 தம்பதிகளுக்கு விசேட திருமணப்பதிவு இடம்பெற்றதுடன் மாலை மாற்றும் நிகழ்வும் நடைபெற்றது

(ஐ-க-74)

# அணைக்கட்டு புனரமைப்பு ஆரம்பம்

தென்மராட்சி, ஜூன் 14

'கெயர்' நிறுவனத்தினரின் நீர் நிலைகள் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் மறவன் புலோ பெரியதூவில் குள அணைக்கட்டு புனரமைக்கப் படவுள்ளது. 6 ஆயிரம் அடி சுற்றுவட்டத்தைக் கொண்ட இந்த அணைக்கட்டு வேலைகளுக்கு 4 லட்சம் ரூபா செலவிடப்படவுள்ளது.

இத்திட்டத்தினால் சுமார் 100 குடும்பங்கள் பயன் பெறும் எனவும் —

புனரமைப்பு வேலைகள் கடந்த வாரம் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாகவும் —

தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)

# ஆசிரியர் பயிற்சி நெறி

அச்சுவேலி, ஜூன் 14

தொலைக் கல்வித் துறை மூலம் மீண்டும் ஆசிரியர் பயிற்சி நெறியை தேசிய கல்வி நிறுவகம் ஆரம்பிக்கவுள்ளது. இதற்கு விண்ணப்பிக்க வேண்டிய இறுதித்திகதி ஜூலை மாதம் 2 ஆம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை பயிற்சி பெறாத 50 வயதுக்கு உட்பட்ட ஆசிரியர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்கள் உதவிப் பணிப்பாளர் நாயகம், கல்வி பரீட்சைகள் பிரிவு தேசிய கல்வி நிறுவகம், மகரகம, என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-11)

# இளம் சந்ததியினருக்கு இலக்கிய ஆர்வத்தை ஊட்ட உதவ வேண்டும்

## ''மறுமலர்ச்சி'' வெளியீட்டு விழாவில் பேச்சு

திருநெல்வேலி, ஜூன் 14

''இதுஒரு சஞ்சிகையின்மறுபிறப்பு. ஐம்பதுவருட காலத்திற்கு பிறகு மறு பிறப்பாக வெளிவந்திருக்கும் இச் சஞ்சிகையை தற்போது வெளியிட முன் வந்திருப்பது சிறப்பான தொரு அம்சமாகும். ஈழத் தமிழரின் பாரம்பரிய இலக்கிய பண்புகளை- மரபுகளை அன்று அடையாளமிட்டுக் காட்டிய இச் சஞ்சிகையானது இன்றும் அவ்வழி நின்று எமது இளம் சந்ததியினருக்கு இலக்கிய தாகத்தை ஊட்ட வேண்டும், ஊட்டும் என்று நம்புகின்றேன்''

மேற்கண்டவாறு மறுமலர்ச்சி சஞ்சிகை வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு வெளியீட்டுரை நிகழ்த்துகையில் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை பேராசிரியர் நா.சுப்பிரமணியன் குறிப்பிட்டார்.

யாழ்.பல்கலைக்கழகநூலக மண்டபத்தில் பல்கலைக்கழக தமிழ் மன்றத்தின் ஆதரவில் இம்மாதம் ஆறாம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெற்ற இவ்விழாவுக்கு கலைப்பீடாதிபதி அ. சண்முகதாஸ் தலைமை வகித்தார்.

பேராசிரியர் நா. சுப்பிரமணியன் அங்கு உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது:-

இங்கு முன்னர் மறுமலர்ச்சி சஞ்சிகை வெளியிடப்பட்ட காலகட்டத்தில் தமிழ் நாட்டில் 'மணிக்கொடி' சஞ்சிகையும் வெளிவந்து இலக்கிய ஆர்வலர்களின் இலக்கிய தாகத்தைத் தீர்க்கப் போதியளவு பங்களிப்பை செய்தது. பண்டைய இலக்கிய இலக்கண மரபுகளுக்கு முரண்படாத வகையில் புதிய கலை வேட்கையுடனும்தமிழ்உணர்வுடனும் படைப்புகள் ஆக்கங்கள் வெளிவரவேண்டும் என்பதே இவ்விரு சஞ்சிகைகளின் கோட்பாடாக இருந்ததை அவதானிக்கலாம்.

இன்று காலத்தின் தேவையைமுன்னிட்டு ஈழத்து தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சிக்கு காத்திரமான பங்களிப்பை செய்யமுடியும் என்ற எதிர்பார்ப்புடன் ''மறுமலர்ச்சி'மறுபிறப்புஎடுத்துள்ளது.இதனைவெளியிடும்பணியில் வரதர், சிற்பி, செங்கை ஆழியான் ஆகிய மூவரும் ஈடுபட முன் வந்திருப்பதற்கு இலக்கிய உலகம் இவர்களுக்கு கடமைப்பட்டுள்ளது.

இவர்களின் இலக்கிய சேவையை பாராட்டாமல் இருக்க முடியாது''— என்றார்.

மறுமலர்ச்சி இணை ஆசிரியர் சிவசரவணபவன்(சிற்பி) அறிமுகவுரை நிகழ்த்துகையில் —

யாழ்ப்பாணத்தவரின் இலக்கிய ஆர்வமும், தமிழ் அறிவும், புலமையும் தனித்துவமானதாக தொன்றுதொட்டு நிலவி வருகின்றது. அன்று 50 ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தின் இலக்கியக் குரலாக விளங்கிய ''மறுமலர்ச்சி'' சஞ்சிகை எதிர்காலத்திலும் இலக்கிய குரலாக இங்கு ஒலிக்க வேண்டும் என்ற தணியாத தாகத்தினால் இன்று மறுபிறப்பு எடுத்து வெளி வந்துள்வது.

தமிழ் மக்களின் பாரம்பரிய மண்ணிலிருந்து நல்லதரமான இலக்கிய இதழ் மலர வேண்டும். தமிழ் உணர்வையும், தமிழ்பண்பாட்டையும்காலத்தின் சூழ்நிலைக்கேற்ப மழுங்கவிடாது பேணிப் பாதுகாக்க வேண்டும் என்ற இலட்சிய வேட்கையுடன் மலர்ந்துள்ளது இச்சஞ்சிகை— என்றார்.

கன்னாதிட்டி மக்கள் வங்கி முகாமையாளரும், எழுத்தாளருமான திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் உரையாற்றுகையில்—

இங்கு எழுத்தாளர்களாக இருந்த பலர் நாட்டுநிலைமைகளினால் புலம் பெயர்ந்து வெளிநாடுகளுக்குச் சென்று விட்டனர். இவர்கள் விட்டுச் சென்ற வெற்றிடத்தை நிரப்புவதற்கு புதிய ''எழுத்தாளர்கள் உருவாக்கப்படவேண்டியது அவசியம். சிறந்த எழுத்தாளர் பரம்பரை ஒன்றை எமது மண்ணில் மீண்டும் உருவாக்குவதற்கு மறுபிறவி எடுத்திருக்கும் இச் சஞ்சிகை வழி வகுக்கும் என்பது எமது நம்பிக்கை— என்றார்.

யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத்தலைவர்எஸ். சிவலிங்கராசா மதிப்பீட்டுரை நிகழ்த்தினார்.

மறுமலர்ச்சிஆசிரியர்வரதர் ஏற்புரை நிகழ்த்தினார். இணை ஆசிரியர் செங்கை ஆழியான் நன்றியுரை நிகழ்த்தினார்.

(ஐ-135)

## நாளை

**ஆனி 1**

செவ்வாய்க்கிழமை

திதி: துதியை

முன்னிரவு: 9.18 வரை

நட்சத்திரம்: திருவாதிரை

பிற்பகல்: 2.12 வரை

கற்கி ஜயந்தி

கரி நாள்

சுபநேரம்: 10.23 —11.53

ராகுகாலம்: 2.53 — 4.23

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

அறிவிலி எனப்படுபவர் மற்றவர்கள் பட்டினி இருந்தாலும் தான்மட்டும் வயிறு புடைக்க உண்டு களிப்பர்.

— விதுரநீதி

# நாகம்மை கொடி ஏறுது, வா!

எடுப்பு

ஏறுதுவா கொடி ஏறுதுவா – எங்கள்
எழில்நாக அம்மை கொடி ஏறுதுவா!

தொடுப்பு

நீறிடும் வா! பகை ஓடிடும் வா! – நாகம்
சீறிடும் வா! சக்திபருள் கூடிடும் வா!

முடிப்பு

[illegible] - [illegible]
பாடிடுவா! தாய்போலத் தெய்வமில்லை
சூடிடுவா! பதம் தொழுதிடவா! - அன்னை
சாடிடுவாள் வினையெல்லாம் தவிடுபடும்.

— முருகனடியான்

[நயினை நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவக் கொடியேற்ற விழா இன்றாகும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். விழிப்புலனற்றோர் சங்க சுயமுயற்சி தொழிற்பயிற்சி நிலைய கட்டடத் திறப்பு விழாச் சிறப்பிதழ்

## தலைவரின் வாழ்த்துச் செய்தி

விழிப்புலனற்றோரின் வாழ்க்கை மேம்பாட்டுக்காகக் கடந்த 22 வருடங்களாக வெற்றிகரமாக இயங்கி வந்த யா/ விழிப்புலனற்றோர் சங்கத்தின் அரிய பெரிய முயற்சியின் பெறுபேறாக நாம் பெற்ற இத் தொழிற்பயிற்சி நிலையத்தின் திறப்பு விழாவைச் சிறப்புடன் கொண்டாடும் இந்த நன்னாளில்—

நாடெங்கிலும் வாழும் குறிப்பாக வடக்கு கிழக்கில் வாழும் கண்பார்வை அற்றவர்களுக்கும், கண் பார்வை குறைவுடையோருக்கும் அவர்களைப் பெற்றவர்களுக்கும், மற்றவர்களுக்கும் நாம் தரும் நற்செய்தியாவது:

கண்பார்வை அற்றவர்களுக்கு நல்லதோர் எதிர்காலம் காத்திருக்கிறது. அவர்களும் மற்றவர்களைப் போலவே தாமே உழைத்து, சுயமாகச் சிந்தித்து, சுயமாகத் தீர்மானங்களை எடுத்து, சுதந்திரமாக வாழ வழிகள் திறந்து இருக்கின்றன. ஆகவே விழிப்புலனற்றோர் ஆகிய நீங்கள் இனிமேலும், எதிர்காலத்தைப் பற்றிய ஒருவித நோக்கமுமின்றி, வாழ்க்கையில் எதுவித எதிர்பார்ப்புமின்றி அறிவிலிகளாகவும், அவமானச் சின்னங்களாகவும் பெற்றவர்களுக்கும், மற்றவர்களுக்கும் மேலும் பாரமாகவும், வீடுகளில் முடங்கிக் கிடக்காதீர்கள். முனைந்து வெளி வாருங்கள். யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் உதவியை நாடுங்கள்.

இன்று விழிப்புலனற்றோரின் நிலையில் மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது உலகின் சகல தேசங்களிலும் விழிப்புலனற்ற மக்கள் போதிய கல்வித் தகைமை பெற்று சமுதாயத்தின் ஏனையோருக்குச் சமமாகப் பட்டதாரிகளாகவும், பல துறைகளில் கலாநிதிகளாகவும் நிபுணத்துவம் பெற்று விளங்குகின்றனர்; பெரும் பதவிகளையும் வகித்துக் கொண்டிருக்கின்றனர். அது மட்டுமன்றி சுயமுயற்சித் துறைகளிலும் ஈடுபட்டு பெரிய தொழில் அதிபர்களாகவும் விளங்குகின்றனர். இன்னும் தத்தமது சமுதாயத்துக்கு வழிகாட்டக்கூடிய ஆலோசகர்களாகவும் இருக்கின்றனர்.

எமது நாட்டில் எமது சமுதாயத்தில் இருக்கும் கண்பார்வை அற்றவர்கள் வெளிவர வேண்டும். இனிமேலும் அவர்களை வீடுகளில்மறைத்து வைத்து கால்நடைகளைப் போல் தீனி போட்டு வீணே அறிவிலிகளாகவும், மூடர்களாகவும் வளர்த்து விடாதீர்கள். சமுதாயத்திலே ஏனையவர்களைப் போன்று கல்வி முதலிய அடிப்படை உரிமைகளைக்கூடப் பெறுவதற்கு அனுமதிக்காமல் அவர்களை வீடுகளில் முடக்கிவைத்திருப்பதும் ஒரு வகையில் மனித உரிமைகளை மீறும் செயலாகும்.

அவர்கள் கல்வி அறிவைப் பெற்றும் சுயமாக உழைத்தும், தாமே வாழ்ந்துகொண்டு நாட்டின் நற்பிரஜைகளாக வர அவர்களுக்கு வழி வகுத்துக் கொடுங்கள். நீங்கள் வலு இழந்தோர் மீது காட்டும் இரக்கமும், அனுதாபமும் அவர்களின் வாழ்க்கைக்கு எதுவிதத்திலும் பயனளியா. மாறாக அவர்களை வெளிக் கொணர்ந்து சிறியவர்களாயின் அவர்களுக்கென்றே உள்ள பாடசாலைகளில் அதாவது கைதடியில் உள்ள நவீல்ட் விடுதி பாடசாலையிலும் அல்லது மானிப்பாயில் அமைந்துள்ள விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வகம் என்ற இல்லத்திலும் சேர்த்து கல்வி கற்க வையுங்கள். ஏற்கனவே வயது வந்தவர்களாயின் இன்று கோலாகலமாக திறப்பு விழா கொண்டாடிக் கொண்டிருக்கும் கைதடியில் அமைந்துள்ள கண்பார்வை அற்றவர்களுக்கான தொழிற்பயிற்சி நிலையத்தில் சேர்த்து சுயமுயற்சித் துறை ஒன்றில் பயிற்சி பெற வையுங்கள். இவ்வாறு நீங்கள் செய்வதன் மூலம் கண் பார்வையற்ற ஒருவர் பெற்றார்களுக்கோ அல்லது ஏனையோருக்கோ பாரமாக இராமல் சுயமாக உழைத்து சுயமாக வாழ்வதன் மூலம் சமுதாயத்திலே சம அந்தஸ்துடைய ஒரு பிரஜையாக அவர் விளங்குவதை எதிர்காலத்தில்நீங்கள் காணக்கூடியதாக இருக்கும்.

சகல தரப்பினருக்குமான நற்செய்தியை விடுக்கும் இந்த வேளையிலே எமது சங்கத்தின் வளர்ச்சிக்கு ஆரம்பகாலத்தில் இருந்தே உதவி வந்த சகல தரப்பினர்களுக்கும் எமது நிர்வாகத்தில் ஒத்துழைத்த சகல அங்கத்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பிரதானமாக இன்று விழாக்காணும் இக் கட்டடத்தை அமைப்பதற்கு இந்தக் காணித் துண்டினைப் பெற்றுக்கொள்வதில் எமக்கு பெரி

[9 ஆம் பக்கம் பார்க்க].

## ஆளுநரின் செயலர் வாழ்த்து

யாழ். விழிப்புலனற்றோர் சங்கம் கைதடியில் தமக்கென ஒரு கட்டடத்தையும் ஒரு தொழிற் பயிற்சிக் கூடத்தையும் அமைத்து அதனை அங்குரார்ப்பணம் செய்யும் இவ் வேளையில், அவர்களுக்கு ஆசிச் செய்தி அனுப்பி வைப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன் சங்க அங்கத்தினரும் விசேடமாக அச்சங்கத்தின் தலைவர் திரு. சிவகுமாரனின் விடா முயற்சியினால் இத்திட்டம் நிறைவேற்றியுள்ளமை மிகப் பாராட்டுக்குரியதாகும்.

இத்தொழிற் பயிற்சிக் கூடத்தை எல்லா அங்கத்தினர்களும் முற்றாகப் பயன்படுத்தி தக்க பலனைப் பெற்று சுயதொழிலை ஆரம்பித்து பயன் பெறுவார்களாக.

சொ. கணேசநாதன்
ஆளுநரின் செயலாளர்

ஆளுநரின் செயலகம்,
வடக்கு—கிழக்கு மாகாணசபை,
திருகோணமலை.

## றோட்டறி தலைவர் வாழ்த்து

யாழ். விழிப்புல வலுவற்றோர் சங்கம் தன் அங்கத்தவர்களின் வாழ்வு வலுவுள்ளதாக அமைய வேண்டும் எனும் நன்நோக்குடனும், அவர்கள் சமூகத்தில் தன்னம்பிகை கொண்ட முயற்சியாளர்களாக ஆக்கப்படவேண்டுமெனும் தூரதிருஷ்டியுடனும் ஆரம்பிக்கும் தொழிற் பயிற்சி நிலையத்தினை வாழ்த்துவதில் பெருமகிழ்வெய்துகிறோம்.

இப்பயிற்சி நிலைய நிர்மாணத்திற்கு எமது றோட்டறிக்கழகம் அந்நாள் தலைவர் Rtn T. S. மகேந்திரன் ஊடாக பங்களித்து உதவியுள்ளது என்பதனை இவ்வேளை நினைவுகூருவது சாலப்பொருந்தும். வலுவற்றோருக்கு வாழ்வு கொடுப்பதில் எமது கழகம் என்றும் தன்பணியைத் தொடருமென உறுதியுரைக்கின்றோம்.

அ. பஞ்சலிங்கம்
தலைவர்
யாழ். றோட்டறிக்கழகம்.

## லயன்ஸ் பிராந்திய தலைவர் வழங்கும் வாழ்த்துரை

யாழ் விழிப்புலனற்றோர் சங்கத் தொழிற் பயிற்சி நிலையத் திறப்பு விழாவை முன்னிட்டு இவ்வாழ்த்தினை லயன்ஸ் கழக வடபிராந்தியத்தின் சார்பில் அனுப்புவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

லயன்ஸ் கழகங்கள் இதுவரை இவர்களுக்கு உதவியது, இவர்களோடு சேர்ந்து வெள்ளைப் பிரம்புதினத்தை வருடா வருடம் நடத்தியது, குறித்தும் பெருமைப்படுகிறது. இப்போது இச் சங்கம் தமது அங்கத்தவர்கள் சுதந்திரமாகத் தம் காலில் வாழ வழிகோலுகின்றது.

1925 இல் கெலன்கீலர்விடுத்த சவாலை ஏற்ற சர்வதேச லயன்ஸ் கழகம் பார்வைக்கு முதலிடம் கொடுத்து செயற்பட்டதோடு பார்வை இழப்பை தவிர்க்க, குறைக்க இழந்த பார்வையைப் பெற LCIF மூலம் நடவடிக்கை எடுத்துவருகிறது. இம் முறையாழ். போதனா வைத்தியசாலைகண்பகுதியைசீராக்க 1,35,181 டொலர்கள் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.

விழிப்புலனற்றவர் புனர்வாழ்வில் அக்கறை எடுத்து சுயதொழில் வாய்ப்பை தேடிக் கொடுத்த யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தை, லயன்ஸ் கழகங்களும் தமதுபங்களிப்பை நல்கி ஊக்குவிக்கும் என்று கூறி, அவர்களைப் பாராட்டி இம்முயற்சி சிறக்க, வளர வாழ்த்துகின்றேன்.

லயன் டாக்டர் சு. சி, அருளானந்தம்.

பிராந்தியத் தலைவர்
பிராந்தியம் – 8 மாவட்டம் 306 B

## சுதேச மருத்துவ மாகாணப் பணிப்பாளர் வாழ்த்து

சகலரைப் போன்றுவிழிப்புலனற்ற மற்றும் பாதிக்கப்பட்ட எமது சகோதரர்களுக்குச் சிறந்ததொரு வாழ்க்கை முறை அமைவதும் அவர்கள் எதிர்காலம் பிரகாசமாக அமைவதும் அதற்கான ஆவனசெய்வதும் எமது தலையாய கடமையாகும். இவர்களின் நலன்களுக்காகக் கட்டடம் அமைக்கப்படுவது வரவேற்கப்பட வேண்டிய செயற்பாடாகும். அதுமட்டுமல்லாது அவர்களின் எதிர்காலமும், வாழ்க்கையும் கட்டியெழுப்பவேண்டியது இன்றைய முக்கிய தேவை என்பதில் மாற்றுக் கருத்திக்கு இடமில்லை.

இதற்கான ஒரு நீண்டகாலத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது இன்றைய காலத்தின் அதிமுக்கிய தேவையாக அமைகின்றது. இதற்காக யாழ். அரசாங்க அதிபர், சமூகசேவைகள் திணைக்களம், புனர்வாழ்வு அதிகாரசபை மற்றும் நலன் விரும்பிகள் இணைந்துஓர் அமைப்பை உருவாக்கி இவர்களின் எதிர்கால வாழ்விற்கானதும் அதனால் பொதுமக்களும் நன்மை பெறக்கூடியதுமான திட்டமொன்றைத் தயாரித்துச் செயற்படுத்தல் வேண்டும்.

இன்று இந்தக் கட்டடத்தைப் திறப்பதில் நாம் மகிழ்ச்சியடைவதுபோல அவர்களின் எதிர்காலத்தைக் கட்டியெழுப்பி அவர்களின் உள்ளக் கதவுகளைத் திறந்து அவர்கள் வாழ்க்கையில் ஒளியை ஏற்றிவைக்கும் போதுதான் நாங்களும் அவர்களும் உண்மையான மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொள்வோம். அவர்கள் எதிர்காலம் சிறப்புற ஏன்னாலான சகல உதவிகளையும் செய்வேன் என உறுதியாகக் கூறுவதுடன், எல்லாம்வல்ல இறைவனிடம் அவர்களின் குறைகள் நீங்கி சுபீட்சம்பெறப் பிரார்த்திக்கின்றேன்.

ஆண்டவன் எமக்களித்துள்ள புலன்களை வைத்துப் புலனற்றோர்களுக்கு உதவுவது எமர கடமை என்பதை நாம் என்றும் நினைவு கூதுவேண்டும்.

பேராசிரியர் சுப்பிரமணியம் பவானி
மாகாண சுதேச மருத்துவபணிப்பாளர்.
சுதேச மருத்துவ திணைக்களம்,
வடகிழக்கு மாகாணம்,
திருகோணமலை.

## றோட்டறிக் கழகத்தின் முன்னாள் தலைவர் வாழ்த்து

யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் கண் பார்வை அற்றவர்களுக்கான தொழிற்பயிற்சி நிலையத்தின் திறப்புவிழா இன்று நடைபெறுவதையிட்டு நான் பெருமகிழ்ச்சிஅடைகின்றேன். இச்சங்கத்தின் முயற்சிகளையும் செயற்பாடுகளையும் நீண்டகாலமாக நான் நன்கு அறிவேன்.

இன்று திறப்பு விழா காணும் இத்தொழிற் பயிற்சி நிலையத்தின் ஆரம்பப் பணிகளுக்கான நிதியை, யாழ். றோட்டறிக்கழகத்தின் தலைவராக இருந்த போது கழகத்தின் சகல அங்கத்தவரின் ஒத்துழைப்புடன் நடத்திய அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பின் மூலம் பெற்று சங்கத்துக்கு வழங்கினோம். இப்பணியில் அந்நாளைய சகல இன்ரறக்ட் கழகத்தினரும் எமக்கு கைகொடுத்து உதவினர்.

விழிப்புலனற்றோர் சங்கத்தின் பணி மேன்மேலும் வளர்ச்சியடைய இறைவனிடம் வேண்டி, சங்க உறுப்பினர்களை வாழ்த்தி நிற்கின்றேன்.

T. S. மகேந்திரன்,
முன்னாள் தலைவர்.
யாழ். றோட்டறிக்கழகம்,
முகாமை இயக்குநர், பெனிசுலா
கண்ணாடித் தொழிற்சாலை.

## செயலாளர் வாழ்த்துரை

யாழ். விழிப்புலனற்றோர் சங்கம் 1976 ஆம் ஆண்டு ஐந்தாம் மாதம் 23 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. அன்றிலிருந்து பல்வேறு தலைமைத்துவங்களின் கீழ் பல இடையூறுகள் மத்தியிலும் வெற்றிகரமாக நிர்வகிக்கப்பட்டு வந்துள்ளது. தமிழ் பேசும் கண்பார்வை அற்றவர்களின் நலனுக்காகவும் வாழ்க்கை மேம்பாட்டிற்காகவும் இயங்கிவரும் இச்சங்கம் அவர்

(9 ஆம் பக்கம் பார்க்க)

**ஸ்ரீ விக்னேஸ்வரா ஸ்ரோர்**
யூனிவேர்ஷல் சிலோன் மார்கெட்டிங் லிமிட்டெட்,
நெஸ்லே லங்கா லிமிட்டெட்,
லங்கா மில்க் பூட்ஸ் (C. W. E.) லிமிட்டெட்
ஆகிய நிறுவனங்களின் விநியோகஸ்தர்
148, கண்டி றோட், சாவகச்சேரி.

**V.M.K. நகை மாளிகை**
சாவகச்சேரி

**சிறி வெற்றிலைக்கடை**
(சந்தை உட்புறம்)
கொடிகாமம் (சி/7877)

**ராஜ் பலஸ்**
24, நவீன சந்தை, சாவகச்சேரி.

**வதனா டிஸ்பென்சரி** சாவகச்சேரி

**வேல் மருந்தகம்** கொடிகாமம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளில் நிலைகொண்டுள்ள படையினரை வாபஸ் பெறவேண்டும்

## ஆளுநரிடம் கல்விப்பணிப்பாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 14

யாழ். மாவட்டத்தில் படையினர் நிலைகொண்டுள்ள பாடசாலைகளில் இருந்து அவர்களை வெளியேற்றி பாடசாலைகள் ஒழுங்காகச் செயற்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

மேற்கண்டவாறு ஐந்து கல்வி வலயங்களையும்சே. ந்த பணிப்பாளர்கள் கூட்டாக வடக்கு—கிழக்கு மாகாண ஆளுநரடம் கோரியுள்ளனர்.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த வடக்கு—கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்த்தனாவைச் சந்தித்த சமயமே இந்தக் கோரிக்கையை அவர்கள் முன்வைத்தனர்.

வலயங்களின் பணிப்பாளர்கள் கூட்டாக ஆளுநரிடம் சமர்ப்பித்தகோரிக்கைகள்வருமாறு:-

★ குடாநாட்டில்உள்ள சில பாடசாலைகளில் பகுதியாகவும் முழுமையாகவும் படையினர் நிலைகொண்டுள்ளனர். அவற்றில் இருந்து வெளியேறுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைக்குஇதுவரை எந்தவிதநடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. படையினர் நிலைகொண்டுள்ளதால் மாணவர்கள் கல்வி கற்கப் போதிய இடவசதி இன்றி உள்ளதுடன் மாணவர்கள் பெரும் அசௌகரியங்களையும் எதிர்நோக்குகின்றார்கள். ஆகவே இந்த விடயத்தில் தலையிட்டு உதவவேண்டும்.

★ வருடாவருடம் திருகோணமலையில் நடைபெறும் தமிழ்மொழி, ஆங்கிலமொழி மெய்வல்லுநர் ஆகியமாகாண மட்டப் போட்டிகளில் போக்குவரத்துப் பிரச்சினைகள் காரணமாக பங்குபற்ற முடியாத நிலையில் யாழ். மாணவர்கள் உள்ளனர். இந்த நிலை நீடித்தால் இந்தப் போட்டிகளில் பங்குபற்றுவதில் மாணவர்களுக்கு ஆர்வம் குறைந்து விடும். ஆகவே இலவசமான போக்குவரத்து வசதியை அவர்களுக்கு ஏற்பாடு செய்து கொடுக்குமாறு கோருகின்றோம்.

★ எதிர்வரும் 18 ஆம், 19 ஆம், 20 ஆம் திகதிகளில் திருகோணமலையில் நடைபெறும் தமிழ்மொழித்தினப் போட்டியில் பங்குபற்றவுள்ள 150 பேருக்கு உடன் போக்குவரத்து வசதி செய்து தருமாறு கோருகின்றோம்.

★ கல்வி அலுவலகங்களில் பணிபுரியும் அதிகாரிகள்தமது அலுவலகப் பணிகளுக்காகக் கொழும்பு, திருகோணமலைக்குச் செல்வதற்கு பாதுகாப்பு அனுமதி மற்றும் ரிக்கெட் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றார்கள். ஒருதடவை பாதுகாப்பு அனுமதி பெற்றால் அதை ஒருவருட காலத்துக்கு செல்லுபடியாகக் கூடிய வகையில் ஏற்பாடு செய்யுமாறு கோருகின்றோம்.

★ புதிய கல்வித்திட்டம் தொடர்பான பயிற்சி மற்றும் கருத்தரங்குகளுக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து வந்து பங்குபற்றும் அதிகாரிகளுக்கான செலவுகளுக்கு மத்திய அரசு கொடுப்பனவு வழங்குகின்றது. ஆனால் மாகாண சபை இந்த வகையான செலவுகளுக்கு கொடுப்பனவு வழங்குவதில்லை. இந்த நிலையை நீக்கி இவ்வாறு வரும் அதிகாரிகளுக்கு முற்பணம்வழங்குவதுடன் அவர்களின் செலவுகளுக்கான கொடுப்பனவைப் பெற ஏற்பாடு செய்ய வேண்டும்.

★ யாழ்ப்பாணத்தில் உள்ள சேதமடைந்த பாடசாலைக் கட்டடங்களை மீள அமைக்கவும், திருத்தவேலைகளை மேற்கொள்ளவும் கூடுதல் நிதி வழங்கவேண்டும்.

★ குடாநாட்டில் உள்ள பெரும்பாலான பாடசாலைகளில் ஆய்வுகூட உபகரணங்கள் இல்லை. ஆய்வுகூட உபகரணம் வழங்கப்பட்ட பாடசாலைகளில் இரசாயனப் பொருள்கள் இல்லை. இந்த நிலையை நீக்கவேண்டும்.

★ பெரும்பாலான பாடசாலைகளில் போட்டோ பிரதி செய்யும் இயந்திரம், ஜெனரேட்டர்கள், கணனிகள், தளபாடங்கள் இல்லை. அவற்றை வழங்க ஏற்பாடு செய்யவேண்டும்.

★ குடாநாட்டுப் பாடசாலைகளில் ஆரம்பப் பிரிவு, ஆங்கிலம், நடனம், சித்திரம், உடற்பயிற்சி ஆகிய பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக் குறை நிலவுகின்றது. அந்த வெற்றிடங்களை நிரப்ப வேண்டும்.

★ அதிபர்களுக்கான சம்பள உயர்வுப் பாக்கி, ஆசிரியர்களுக்கான இடர்காலக் கொடுப்பனவு ஆகியவற்றை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

★ யாழ். வலயம் தவிர்ந்த ஏனைய வலய அலுவலகங்களுக்கு நிரந்தர கட்டடம் அமைக்கப்படவேண்டும்.

★ ஐந்து வலயங்களுக்கும் வாகனங்களை வழங்கவேண்டும்.

★ யாழ்ப்பாணத்தில் கல்விக் கல்லூரியை இயக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

(இ-3-100)

## வெளியிடங்களுக்கான போக்குவரத்து அனுமதியை இலகுவாக்க ஆளுநர் உறுதி

யாழ்ப்பாணம், ஜூன் 14

குடாநாட்டில் இருந்து வெளி மாவட்டங்களுக்குச் செல்லும் பயணிகள் தமது போக்குவரத்து அனுமதியை இலகுவாகப் பெறக்கூடிய ஏற்பாடுகளைச் செய்து தருவதாக வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்த்தனா உறுதி அளித்துள்ளார்.

யாழ். வந்த ஆளுநரைச் சந்தித்த நுகர்வோர் பாதுகாப்புச் சங்கத்தின் தூதுக்குழுவிடமே ஆளுநர் இந்த உறுதிமொழியை வழங்கினார்.

மேற்படி தூதுக்குழு முன்வைத்த கோரிக்கைகள் வருமாறு:-

★ குடாநாட்டில் இருந்து வெளி மாவட்டங்களுக்குச் செல்லும் பயணிகள் போக்குவரத்து அனுமதி பெறுவதில் பல கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளனர். இந்த அனுமதி பெறும் நடைமுறையை இலகுவாக்க வேண்டும்.

★ யாழ். மாவட்டத்தில் உள்ள மின் பாவனையாளர்கள் பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். மின்மானிகள் பொருத்தப்படாததால், அவர்கள் கூடுதல் பணத்தைச் செலுத்தவேண்டிய நிலையில் உள்ளனர். ஆகவே சகல வீடுகளிலும் மின்மானிகள் பொருத்தப்பட வேண்டும்.

★ குடாநாட்டுக்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை எடுத்துவரக் கூடுதல் கப்பல் வசதி செய்து தரவேண்டும்.

(இ-3)

## யாழ். விழிப்புலனற்றோர் சங்க கட்டடத் திறப்பு விழா சிறப்பு மலர்

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

### தலைவரின்...

தும் உதவிய வடக்கு—கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் திரு. கணேசநாதன் அவர்களுக்கும் நேரடியாக இகாணியைக் எமக்குக் கையளிப்பதில் உதவிய முன்னாள் மாவட்ட காணி அதிகாரி அமரர் சம்பந்தன் அவர்களுக்கும் முன்னாள் அரசாங்க அதிபர் திரு. பத்மநாதன் அவர்களுக்கும் யாழ். விழிப்புலனற்றோர் சங்கம் தனது பெரு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது. இவ்வாறு அரச அதிகாரிகள் மட்டுமன்றி அரசு சாரா நிறுவனங்களும் சமுதாயத்தின் சகல தரப்பினர்களும் கடந்த காலங்களில் எமக்கு உதவியது போல இனிமேலும் எமது சங்கத்தின் வளர்ச்சிக்கும் நோக்கத்திற்கும் செயற்பாட்டிற்கும் உறுதுணையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றோம்.

R. சிவகுமாரன்
தலைவர்

யாழ். விழிப்புலனற்றோர் சங்கம்,
228, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

### செயலாளர்...

களின் கல்வி வளர்ச்சி, தொழில் வாய்ப்புக்கள், சுயதொழில் முயற்சிகள் போன்ற இன்னோரன்ன துறைகளில் பெரு முயற்சிகளை மேற்கொண்டு செயற்பட்டு வெற்றி கண்டுள்ளது.

சங்கத்தின் அரிய பெரிய முயற்சிகளில் ஒன்றாகவே இன்று விழாக்காணும் கைதடியில் அமைந்துள்ள, கண்பார்வையற்றவர்களுக்கான தொழிற்பயிற்சி நிலையமும் சான்று பகர்கின்றது. பெருமளவு முயற்சியையும் நிதியையும் செலவிட்டு கட்டப்பட்ட இந்தக் கட்டடத்தில் கண்பார்வை குறைந்தவர்களுக்கும், கண்பார்வை அற்றவர்களுக்கும் கைத்தொழில் துறைகளில் பயிற்சி அளித்து எதிர்காலத்தில் இத் தொழில் துறைகளை மேற்கொண்டு அவர்கள் சுயமாக வாழ வழிகாட்டப்படும்.

அத்தோடு சங்கத்தின் வளர்ச்சிப்பணியில் ஆரம்பகாலத்தில் இருந்து இன்றுவரைகைகொடுத்து உதவிய அனைவருக்கும், தனித்தனியாக கொடுத்து உதவிய அனைவருக்கும் தனித்தனியாகவும் கூட்டாகவும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். சங்கத்தின் பணிமேன்மேலும் வளர்ச்சியடைய எல்லாம்வல்ல இறைவனை வேண்டி அதன் வளர்ச்சிப் பாதையில் சகல தரப்பினரும் தொடர்ந்து கை கொடுத்து உதவவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றோம். சங்கத்தின் பெருமுயற்சி வெற்றி அடைந்தமைக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வி. கனகசபை
செயலாளர்

யாழ். விழிப்புலனற்றோர் சங்கம்,
228, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

## சமய சந்நிதிகளில்

சங்கானை பிரதான வீதியில் அமைந்துள்ள அரசடி வைரவப் பெருமான் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகியது.

பத்து நாள்கள் தொடர்ந்து நடைபெறும் உற்சவத்தில் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வைரவப் பெருமானின் தேர்ப் பவனியும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன.

(க-29)

★ ★ ★

பன்னாலை சிவபூதராயர் ஆலயத்தில் கடந்த நான்காம் திகதி நடைபெற்ற வைகாசி விசாகப் பொங்கலைத் தொடர்ந்து வருடாந்த உற்சவம் தினமும் காலை 10 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

உற்சவ இறுதி நாளாகிய 18 ஆம் திகதி காலை சங்காபிஷேகம், பகல் மகேஸ்வர பூசை, இரவு பூங்காவனத் திருவிழா என்பன நடைபெறும். (க-152)

★ ★ ★

புங்குடுதீவு மேற்கு 4 ம் வட்டாரம் பிட்டியம்பதி ஸ்ரீ காளிகா பரமேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகியுள்ளது. (க-167)

## ஜே. 70 அ. அட்டை விநியோகம்

குருநகர் கிழக்கு (ஜே. 70) கிராமசேவையாளர் பிரிவுக்கு உட்பட்டவர்களுக்கான விசேட அடையாள அட்டை இன்று காலை 9 மணி முதல் குருநகர் இராணுவ முகாமில் வைத்து வழங்கப்படும் என்று அந்தப் பகுதி கிராம சேவையாளர் அறிவித்துள்ளார்.

## கிட்டுப்பூங்காசெய்திகுறித்து யாழ். பிரதி மேயர் விளக்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 14

யாழ்ப்பாணம், நல்லூர் கிட்டுப் பூங்கா தொடர்பாகச் சஞ்சீவியில் வெளியான செய்தி குறித்து யாழ். நகரின் பிரதி மேயர் என். ரவிராஜ் விளக்கமொன்றை நேற்றுக் கொழும்பிலிருந்து அனுப்பி வைத்துள்ளார். அவர் தெரிவித்திருப்பதாவது:-

''கிட்டுப் பூங்கா சீரமைக்கும் முயற்சிக்கு முட்டுக்கட்டை'' என்ற தலைப்பில் கடந்த 12 ஆம் திகதி சஞ்சீவியில் வெளியான செய்திஎமக்கு மிக்க வேதனையை அளிக்கின்றது. இது உண்மைக்குப் புறம்பான அபாண்டமான குற்றச்சாட்டாகும்.

எந்தப் பிரச்சினையிலும் நாம் மிகவும் நிதானமாகவே நடந்துள்ளோம். தொடர்ந்தும் நிதானத்தையே கடைப்பிடிப்போம் என்பது நாம் யாழ். நகர் வாழ் மக்களுக்குக் கொடுக்கும் உறுதிமொழி ஆகும். மக்களின் உணர்வுகளைத் தட்டியெழுப்பி வேடிக்கை பார்க்க நாம் விரும்பவில்லை.

கிட்டுப் பூங்கா அழிந்ததா? அழிக்கப்பட்டதா? என்பதை நாம் சிந்தித்துப்பார்க்கவேண்டும். அதைத் திருத்தி இயங்க வைப்பதற்கு இராணுவத் தரப்பில் அனுமதி வழங்கப்படுமா [illegible] அதே வட்டாரத்தில் இருந்து, இப்பூங்கா கிட்டுவின் பெயரில் தொடர்ந்து இயங்க அனுமதி உண்டா? என்பதையும் அறிந்து தெரிவித்தால் உடனடியாக அப்பூங்காவை நாம் சீரமைக்கும் பணியை ஆரம்பிப்போம். இளஞ் சிறார்களின் பொழுதுபோக்கு வசதிக்கு உள்ள இடமாக மாற்றியும் அமைப்போம்.

துரையப்பா விளையாட்டரங்குக்கு அதன் பெயரை மாற்றியமைக்க வேண்டும் என்று வலுவான கோரிக்கை விடுக்கப்பட்ட போதும் அதை நாம் ஏற்காது நிராகரித்தோம். அதே போன்று கிட்டு பூங்காவின் பெயரையும் மாற்றக் கூடிய ஒரு சந்தர்ப்பத்தை நாம் எவருக்கும் கொடுக்கமாட்டோம்.

யாழ். மாநகர சபையின் சென்ற கூட்டம் 11-06-99 இல் நடைபெற்றது. வேறு கட்சி உறுப்பினர்கள் யாரும் கலந்து கொள்ளவில்லை. இருப்பினும் நாம் எதுவித மான தீர்மானமும் எடுக்கவில்லை. இந்த விடயம் பற்றிய பேச்சே எழவில்லை.

முன்னைய தினம் அதாவது 10 ஆம் திகதி நடைபெற்ற நிதிக் குழுக் கூட்டத்தில் ஏனைய மூன்று கட்சிகளில் இரு கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். அந்த நிதிக் குழுக் கூட்டத்தில் யார் யார் என்ன கருத்துத் தெரிவித்தனர் என்பது பற்றி நான் வெளியிடுவது சம்பிரதாயத்துக்கு மாறான செயலாகும். இருப்பினும் இது சம்பந்தமான இறுதி முடிவை வேறு ஒரு தினத்தில் எல்லாக் கட்சி உறுப்பினர்களும் சமுகமளித்திருக்கும் நிதிக் குழுக் கூட்டத்தில் ஆராய்வதென்று தீர்மானிக்கப்பட்டது.

மேலும் இச்செய்தி தமிழர் விடுதலைக் கூட்டணிக்குப் பாரிய மனத் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ் மக்களின் நலனுக்காக, விமோசனத்துக்காக அன்றும் இன்றும் என்றும் பாடுபட்டு உழைக்கு ஒரு கட்சி. தமிழ் மக்களின் நலனுக்கும் அவர்களின் சுய கௌரவத்துக்கும் விரோதமான எந்தவொரு செயற்பாட்டையும் தமிழர் விடுதலைக் கூட்டணி மேற்கொள்ளாது — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஆசிரியர் குறிப்பு:**

கிட்டுப் பூங்காவை அதே பெயருடன் திருத்திச் சீரமைத்து இயங்க வைப்பதில் பிரதிமேயரும் அவரது கட்சியினரும் ஆர்வமாக இருக்கின்றனர் என்பதை அவரதுவிளக்கம் தெளிவுபடுத்துகின்றது.

இதன் காரணமாக அவரின் விளக்கத்திலுள்ள ஏனைய விடயங்கள் குறித்துச் சர்ச்சை எழுப்புவது தேவையற்றது எனக் கருதுகின்றோம்.

(ஆ-ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லண்டனில்...

(முதலாம் பக்கத் தொடர்)

அவர் லண்டனில் தங்கியிருக்கும் காலத்தில் மேற்கு நாடுகளின் அரச பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தி எமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்துவார். இதற்காகவே விடுதலைப் புலிகள் தலைவர் அவரை லண்டனுக்கு அனுப்பியுள்ளார். அவருக்கும் தலைவருக்கும் இடையில் எந்தவித முரண்பாடுகளும் இல்லை.

லண்டனில் உள்ள சர்வதேச அலுவலகத்தை சீரமைக்கும் பணியில் அன்ரன் பாலசிங்கம் ஈடுபடுவார் என்று கூறப்படுவதில் எந்தவித உண்மையும் இல்லை.

விடுதலைப் புலிகள் அமைப்பு மூன்றாம் தரப்பு மூலம் பேச்சு நடத்தத் தெரிவித்த விருப்பம் தொடர்பான மேற்கு நாடுகளுடன் அவர் கலந்துரையாடி இலங்கை அரசுக்கு இந்த விடயத்தில் அழுத்தம் கொடுக்க முனைவார்.

இப்படி அன்ரன் ராஜா மேலும் தெரிவித்தார்.

(இ-3-ரீ)

## தேர்தல்களை...

(முதலாம் பக்கத் தொடர்)

ஆனால் தற்சமயம் பொது மக்கள் ஐக்கிய முன்னணிக்கு கிடைத்துள்ள வெற்றியைக் கருத்தில் கொண்டு இந்தத் தேர்தல்களை முன்கூட்டியே நடத்த வேண்டும் என்று அமைச்சர்கள் கோரியுள்ளனர். (இ-3)

## அர்ச்.அந்தோனியார்..

(முதலாம் பக்கத் தொடர்)

பக்தர்கள் அல்லோல கல்லோலப்பட்டுத் தலைதெறிக்க ஓடினர்.

மீட்புப்பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு அவசரம் அவசரமாகக் காயமடைந்தோர் வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட விநோதினி (வயது 30) என்பவர் அங்கு மரணமானார்.

மேற்படி உற்சவத்தில் 10 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் பங்குபற்றினர்.

(இ-3-21)

## மீன் பிடியியல் டிப்ளோமா கற்கை நெறி

வலி. தெற்கு, ஜூன் 14

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் மீன் பிடியியல் டிப்ளோமா கற்கை நெறிகளில் பயிற்சியாளர்களைச் சேர்த்துக் கொள்ள விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் 180 புள்ளிகளை பெற்று பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்றுள்ள சகலமாணவர்களும் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

பல்கலைக்கழகத்தில் உள்வாரி முழுநேர கற்கை நெறியாக ஒரு வருடகாலத்திற்கு இந்த கற்கை நெறி இடம்பெறும்.

கற்கைநெறி ஜூலை 19 ஆம் திகதி ஆரம்பமாகும்.

(இ-152)

# வடக்கு - கிழக்கு மாகாணசபை ஊழியர்களுக்குபதவி உயர்வுபரீட்சை

## 10 ஆண்டுகளின் பின் நடைபெறுகின்றது

யாழ்ப்பாணம், ஜூன் 14

வடக்கு —கிழக்கு மாகாண சபையின் கீழ் உள்ள திணைக்களங்களில் பணி புரியும் ஊழியர்களுக்குப் பதவி உயர்வு வழங்கும் தகுதி காண் பரீட்சைகள் பத்து வருடங்களின் பின்னர் தற்சமயம் நடத்தப்பட்டு வருகின்றன.

வடக்கு — கிழக்கு மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் கே. பரமேஸ்வரன் இத்தகவலைத் தெரிவித்தார்.

1989ஆம் ஆண்டு மாகாண சபை உருவாக்கப்பட்ட பின்னர் அந்தச் சபையின்கீழ் பணி புரியும் உத்தியோகத்தர்கள் பதவி உயர்வு பெறுவதற்கான பரீட்சைகள் இதுவரை நடத்தப்படவில்லை.

இதன் காரணமாக அவர்திகநிகள் பதவி உயர்வுகளைப்பெற முடியாமல் இருந்தது.

இந்த நிலையை நீக்குவதற்காகத் தகுதி காண் பரீட்சைகள் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி திட்டமிடல் உத்தியோகத்தர்களுக்கான பரீட்சை நேற்று முன்தினம் நடத்தப்பட்டது.

சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான பரீட்சை எதிர் வரும் 26 ஆம் நடத்தப்படவிருக்கின்றது.

மாகாண சபையில் உள்ள நூறுக்கு மேற்பட்ட சேவைகளுக்கான தகுதிகாண் பரீட்சைகள் படிப்படியாக நடத்தப்படவிருக்கின்றன.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

(இ-3)

# ரோந்துசென்ற படையினர் மீது புலிகள் தாக்குதல்

மட்டக்களப்பு, ஜூன் 14

மட்டக்களப்பு மாவட்டம், பாலமீன் மடுப் பகுதியில் ரோந்து சென்ற படையினர் மீது நேற்று மாலை 7-15 மணியளவில் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் ஒரு பொலீஸார் உயிரிழந்தார் என்றும்—

தாக்குதலில் சிக்கி 26 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர் காயமடைந்தார் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

# 3 விமானங்கள் இன்று சேவை

யாழ்ப்பாணம், ஜூன் 14

பலாலிக்கும்—இரத்மலானைக்கும் இடையில் இன்று முதல் வாரத்தில் மூன்று நாள்கள் மேலும் ஒரு விமானச் சேவை நடத்தப்படவிருக்கின்றது.

மேலதிக சேவை இடம்பெறும் திங்கள், வியாழன், சனி ஆகிய நாள்களில் முதலாவது சேவைக்குரிய பயணிகளை காலை 7 மணிக்கு யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-3)

# எக்ஸ்றேஇயந்திரம்வந்தும் இயங்க முடியாத நிலை!

யாழ்ப்பாணம், ஜூன் 14

மந்திகை ஆஸ்பத்திரியின் எக்ஸ்றே பிரிவுக்கு புதிதாக அனுப்பப்பட்ட நடமாடும் எக்ஸ்றே இயந்திரம் ஒன்று பொருத்தப்பட்டும் இயங்க முடியாத நிலையில் இருந்து வருகின்றது.

பொருத்திய இயந்திரத்தை ஓட வைப்பதற்காக பாவிக்கப்படும் அதி முக்கிய பொருளான ''ஜெலி'' என்ற பொருள் இல்லாததாலேயே இயக்க முடியாதுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இயந்திரத்துடன் சேர்த்து அனுப்ப வேண்டிய இப்பொருளைக் கொழும்பில் இருந்து அனுப்பத் தவறியமையினாலேயே அது இயங்க முடியாதுள்ளது என்று கூறப்படுகின்றது.

தற்போது ''ஜெலி''யை அங்கிருந்து பெறுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (இ-15)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்)

பெரிய அளவில் இருக்கும் எனத் தெரிவிக்கும் ஆய்வாளர்கள் இந்தத் தாக்குதல் ஆனையிறவு தளம் மீதாக இருக்கலாம் அல்லது வன்னியில் இருந்து படைகளை விரட்டுவதாக இருக்கலாம் என்று தெரிவித்துள்ளனர்.

# கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் பதவிகள்

## விரைவில் நிரப்பப்படும்

யாழ்ப்பாணம், ஜூன் 14

வடக்கு - கிழக்கில் கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் பதவிக்கு உள்ள 40 வெற்றிடங்களும் விரைவில் நிரப்பப்படவிருக்கின்றன.

இந்தப் பதவிக்கு ஆள்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சை வடக்கு - கிழக்கில் உள்ள எட்டு நிலையங்களில் நேற்று இடம்பெற்றன.

இந்தப் போட்டிப்பரீட்சையில் 175 பேர் தோற்றினர் என்றும் —

தகுதியானவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு அடுத்த இரண்டு மாதத்தில் நியமனம் வழங்கப்படும் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

## உள்நாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்)

காக நாளை மறுதினம் யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப்படுவார் என்று நீதிச் சேவை ஆணைக்குழு அதிகாரிகள் தெரிவித்தனர்.

புதைகுழி தோண்டுவதற்கான கனரக உபகரணங்களை ஏற்பாடு செய்யும்படி நீதிச்சேவை ஆணைக்குழு யாழ். பொலீஸ் பொறுப்பதிகாரியைப் பணித்துள்ளது.

அதேநேரம் — புதைகுழி தோண்டும் பணியில் பார்வையாளர்களாகப் பணிபுரிய வந்துள்ள சர்வதேச அமைப்புப் பிரதிநிதிகளும், சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகளும் நேற்றுக்கூடி எடுக்கப்படவேண்டியநடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்தனர்.

(இ-3)

## தேவரதம் படகு சேவை

யாழ்ப்பாணம், ஜூன் 14

ஊர்காவற்றுறை பிரதேச சபையினால் பொறுப்பேற்கப்பட்டுள்ள 'தேவரதம்' படகு இன்று முதல் ஊர்காவற்றுறைக்கும் நயினாதீவுக்கும் இடையில் சேவையில் ஈடுபட விருக்கின்றது.

அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் இந்தப் படகு அனலைதீவு, எழுவைதீவு, ஊர்காவற்றுறை ஆகிய வற்றுக்கிடையில் தினமும் இரு சேவைகளை நடத்தும்.

## மாநாடு

யாழ். றோட்டரிக் கழகத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட பாடசாலைகளின் இன்ரறக்ட் கழக மாநாடு நேற்று யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் இளைஞர் சேவைகள் மன்ற பணிப்பாளர் திருமதி எஸ். குணரத்தினம், றோட்டேரியன் ஏ. பஞ்சலிங்கம், திருமதி சரோஜா சிவச்சந்திரன் மற்றும் யுனிசெவ் நிறுவன பணிப்பாளர் திருமதி பெனி புறூனி ஆகியோர் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர்.

## இலங்கையின்....

(முதலாம் பக்கத் தொடர்)

என்று செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

இந்த விவகாரம் குறித்து நடவடிக்கை எடுக்குமாறு பிரிட்டனிடம் இலங்கை அரசு முன்பு கோரியிருந்தது குறிப்பிடத்தக்கது.

(இ-3-ரீ)

## கைப்பற்றிய...

(முதலாம் பக்கத் தொடர்)

யுத்த நடவடிக்கைகள் மீண்டும் ரத்வத்தையின் கைகளுக்கு வந்த பின்னர் விஜயம் மேற்கொண்டுள்ள அவர் அந்தப் பிரதேச மக்களுடன் கலந்துரையாடி அவர்களின் தேவைகளையும் குறைபாடுகளையும் கேட்டறிந்தார்.

(இ-3-ரீ)


வேலையாள்கள் தேவை

புதிதாக ஆரம்பிக்க இருக்கும்
மணி தொலைத்தொடர்பு நிலையத்துக்கு
தொலைபேசி இயக்குநராகக் கடமையாற்றுவதற்கு ஆங்கில அறிவுள்ள பெண் ஒருவரும் இதே நிறுவனத்துக்குத் தமிழ், ஆங்கில தட்டச்சு வேலைகள் செய்யக்கூடியவரும் அத்துடன் றோணியோ வேலைகள் செய்யக்கூடியவருமான ஒரு பெண்ணும் தேவை.
கல்விச் சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.
தொடர்பு:-
சிவநெறி கல்வி நிலையம்
(ஸ்ரான்லிக் கல்லூரிக்கு அருகில்)
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(சந்திக்கும் நேரம் பி.ப. 3.00 மணி முதல் 5.30 மணிவரை)
(66593)

இன்று 14 - 06 - 99 ஆம் திகதி முதல் புதிய இடத்தில் இயங்குகின்றது
★ரம்மியாஸ்★ சில்க்ஸ்
ஆடவர்களே! நீங்கள் அணிந்து மகிழ்ந்திடும்...
Ⓣ T சேட் Ⓣ சேட் Ⓣ றெடிமேட் ரவுசர்
மற்றும் ஆண்களுக்கேற்ற அனைத்து ஆடைத் தெரிவுகளையும் தெரிவு செய்திட நாடுங்கள்
ரம்மியாஸ் சில்க்ஸ்
181, நவீன சந்தை, (உட் புறம்) யாழ்ப்பாணம்.
(சி/7851)

விற்பனையில் சலுகை
மீண்டும் யாழ்நகரில்...
ASIA, HERO, JIALING
மோட்டார் சைக்கிள்கள்
JL - 70, AH - 70, AH - 100
CJ - 50F - (TVS)
ஆண், பெண் இரு பாலாருக்கும் பாவனைக்குகந்த மிகச் சிறந்த மோட்டார் சைக்கிள்கள் உடன் விற்பனைக்கு உண்டு.
குறிப்பு: ஒரு லீற்றர் பெற்றோலுக்கு 100 கிலோ மீற்றர் ஓடக்கூடியது.
RAVE MOTORS
245, Stanley Road, JAFFNA.
தொலைபேசி இல: 021 - 2048
(66586)


இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேற்] லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361, ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14-06-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org